# தலைவர் மடல்

**அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளுக்கு வணக்கம்!**

உதவிக் கோட்டப்பொறியாளர் பதவி உயர்வில் கடைபிடிக்கப்படும் வழிமுறைகள் மற்றும் விதிகளைப் பற்றி சங்க உறுப்பினர்களாக உள்ள உதவிப் பொறியாளர்கள் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமான ஒன்று.

**பணி விதிகள் - பதவி உயர்வு:**

உதவிக் கோட்டப் பொறியாளார் பதவி உயர்விற்கு அந்தந்த ஆண்டில் - ஜனவரி 2ஆம் தேதி முதல் ஜனவரி 1ஆம் தேதி வரை - ஏற்படும் காலிப் பணியிடங்கள் கணக்கிடப்பட்டு வந்தது. எடுத்துக்காட்டாக 2025-2026ஆம் ஆண்டுக்கு, 02.01.2025 முதல் 01.01.2026 வரையிலான காலத்தில் ஏற்படும் காலிப்பணியிடங்களைக் கணக்கில் கொள்வது ஏற்கெனவே நடைமுறையில் இருந்த ஒன்று. இவ்வாறு பணி விதிகளில் - ‘Section 17 : The Tamil Nadu Highways Engineering Service’ விதிகளில் - ஏதும் கூறப்படவில்லை அதற்கான அரசாணை இருக்கிறதா என்றும் தெரியவில்லை.

உதவிக் கோட்டப்பொறியாளர், கோட்டப்பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் ஆகிய பதவிகளுக்கு, அந்தந்த ஆண்டின் ஜூலை 15ஆம் தேதி அன்று பதவி உயர்வு பெறுவதற்கானத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

தற்போது சில விதிகளில் மாற்றம் செய்தும் தேவையற்ற சில விதிகளை நீக்கியும் பணி விதிகளை அரசு மறு வெளியீடு செய்துள்ளது (Reissued). இதில் முக்கியமான ஒன்று, மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு, அந்தந்த ஆண்டின் ஏப்ரல் 1ஆம் தேதி அன்று பதவி உயர்வு பெறுவதற்கானத் தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பது. தகுதி வாய்ந்தவர்களின் பெயர்கள் தேர்ந்தவர் பெயர்ப் பட்டியலில் இடம் பெறும்.

ஒவ்வோர் ஆண்டின் (Panel Period) காலிப் பணியிடங்கள் மதிப்பீட்டிற்கு, ஏற்கெனவே உள்ள காலிப் பணியிடங்களையும், அந்த ஆண்டில் ஓய்வு பெறுபவர்களால் ஏற்படவுள்ள காலிப் பணியிடங்களையும், பதவி உயர்வு பெற்று செல்பவர்களினால் ஏற்படவுள்ள காலிப் பணியிடங்களையும் (உதாரணம் : உதவிக் கோட்டப்பொறியாளர் பதவி உயர்வு என்றால், உ.கோ.பொ பதவியிலிருந்து கோ.பொ பதவி உயர்வில் செல்ல இருப்பவர்களின் எண்ணிக்கை) கணக்கில் கொள்ள வேண்டும். அந்த எண்ணிக்கைக்கு ஏற்ப (எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அரசு நிர்ணயித்துள்ள கூடுதல் இடங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்) ஏப்ரல் 1ஆம் தேதி தகுதி பெற்றுள்ளவர்களைச் சேர்த்து (ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் நீங்கலாக) ‘பதவி உயர்வுக்குத் தகுதியானவர்களின் தேர்ந்தவர் பெயர்ப்பட்டியல் (Panel)’ தயார் செய்து அப்பட்டியலுக்கு அரசிடமிருந்து ஒப்புதல் பெற்று பதவி உயர்வு வழங்கப்படும்.

தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் பணிவிதிகள் பிரிவு 2 மற்றுன் 5-ன் கீழுள்ள அட்டவணைகளில், ஓராண்டில் உருவாகும் உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கான 4 காலிப்பணியிடங்களில் 3 இடங்களை 5 ஆண்டுகளுக்கும் குறையாத பணிக் காலம் முடித்த உதவிப் பொறியாளார்களுக்குப் பதவி உயர்வு வழங்கவும் 4ஆவது இடத்தை இளநிலைப் பொறியாளர் பதவியில் 10 ஆண்டுகளுக்கும் குறையாத பணிக் காலம் முடித்தவர்களை பணி மாறுதல் மூலம் நியமனம் செய்யவும் (3:1 விகிதத்தில்) வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய அனைத்து விதிகளையும் பின்பற்றி தற்போது காலியாகவுள்ள உதவிக் கோட்டப் பொறியாளார் காலிப்பணியிடங்களை தகுதியுள்ள உதவிப் பொறியாளார்களைக் கொண்டு நிரப்பிட வேண்டுமென முதன்மை இயக்குநர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**சங்கக் கட்டடப்பணி, சிற்றுண்டிக் கூடம் தொடர்பான விவரங்கள்:**

சங்க கட்டட விரிவாக்கப் பணிகள் 13.09.2025 அன்று புதிய நிருவாகிகள் பொறுப்பேற்றது முதல் ஒப்பந்ததாரரால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இதுவரை நடைபெற்ற கட்டுமான விரிவாக்கப் பணிகள் தொடர்பான கணக்குகள் முறையாக முன்னாள் நிருவாகிகளால் ஒப்படைக்கப்படவில்லை. எனவே, புதிய செயற்குழுவின் அனுமதியுடன் முன்னாள் நிருவாகிகளிடம் கட்டடப் பணிகள் தொடார்பான விவரங்களையும் கணக்குகளையும் பெற்று ஆய்வு செய்தபின் கட்டடப் பணிகளைத் தொடர்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், கட்டட நிதி மிகவும் குறைவாக உள்ளதால் சங்க உறுப்பினர்களிடமிருந்து நிதி பெற்று கணக்குகளில் முறைப்படுத்தி புதிய ஒப்பந்தம் போடப்பட்டு கட்டடப் பணிகள் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கக் கட்டிடத்தில் நடைபெற்று வந்த சிற்றுண்டி கூடம் பல மாதங்களாக செயல்படாமல் இருந்ததை மீண்டும் புனரமைத்து தலைமைப் பொறியாளார் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அவர்கள் தொடக்கி வைத்து அவர்களின் மேற்பார்வையிலும் அறிவுறுத்தலின் பேரிலும் நடைபெற்று வந்தது. தற்பொழுது சில நாட்களாக சிற்றுண்டி கூடம் செயல்படாமல் உள்ளது. அதனையும் விரைவில் சரிசெய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தலைமைப் பொறியாளர் பிறந்த தேதி மாற்றம்:**

கட்டுமானம் மற்றும் பராமாரிப்பு தலைமைப் பொறியாளர் பொறிஞர் கே.கு.சத்தியபிரகாஷ் அவர்கள் தனது பிறந்த தேதியை மாற்றம் செய்வதற்கான கோரிக்கை மனு ஒன்றினை அரசிடம் வழங்கியுள்ளதாகவும் மாண்பமை சென்னை உயார்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தொடர்ந்து கோரிக்கை மனுவினைப் பரிசீலனை செய்ய உத்தரவு பெற்றுள்ளதாகவும் சங்கத்திற்குத் தெரிய வருகிறது. தலைமைப் பொறியாளர் அவர்களுக்குப் பிறந்த தேதியை மாற்றி உத்தரவு வழங்கப்படுமானால் அவருக்கு அடுத்த நிலையில் உள்ள பொறியாளார்கள் முதல் கடைநிலையிலுள்ள உதவிப் பொறியாளார்கள் வரை பாதிப்படைவார்கள். பணிக்காலம் முடிவுறும் நேரத்தில் துறையின் உயர்ந்த பொறுப்பில் உள்ளவர்களின் இது போன்ற பிறந்த தேதியை மாற்றக்கோரும் மனுக்களை பரிசீலனை செய்யக் கூடாது என மாண்பமை உயார்நீதிமன்றத்தால் பல்வேறு வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு அந்த மனுவினை ஏற்கக் கூடாது என்று அரசிடம் வேண்டுகோள் வைக்கலாமா என்று ஆலோசிக்க வேண்டியிருக்கிறது.

சங்க உறுப்பினர்கள் ஒற்றுமையுடனும் உறுதித் தன்மையுடனும் செயல்பட்டால் சங்கம் மேற்கொள்ளும் அனைத்துச் செயல்பாடுகளிலும் பல்வேறு இலக்குகளை அடைய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வாழ்க!** **பொறியாளர் ஒற்றுமை ஓங்குக!!**

அன்புடன்

(சே.இராமநாதன்)

Copy of:

# Association of Tamil Nadu Highway Engineers

**Recognised in G.O Ms. No. 1814 Public (Services) Dept., Dated 21.05.1956**
**'Highway Engineers Home', 35v, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015**
Phone : 044 - 2230 0190 / 4312 3792, Email : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
www.tnhighwaysengineers.com

| President | General Secretary | Treasurer |
|---|---|---|
| **Er.S.RAMANATHAN,** B.E., | **Er.P.VEERAMANI,** M.E., M.B.A., | **Er.S.THIYAGARAJA,** M.E., |
| Mobile No.: 88708 88918 | Mobile No.: 97517 04393 | Mobile No.: 98436 40475 |


**Letter No.401/ATNHE/2025,** **dated 14.10.2025**

**To**
**The Regional Officer,**
**National Highways Authority of India (NHAI),**
**Chennai / Madurai**

**Respected Sir,**

**Sub: Request for Exemption of Toll Fee for Highways Engineers under Rule 11 of NH Fee Rules, 2008**

We wish to bring to your kind notice that the State of Tamil Nadu has had an exclusive Highways Department for the development of road infrastructure for the past 75 years. The Tamil Nadu Highways Engineers Association (TNHEA) is a registered body comprising about 1,700 engineers, from the rank of Assistant Engineer up to Chief Engineer, office from chennai to kanyakumari.

On behalf of our Association, I humbly submit this representation seeking toll fee exemption for Engineers of the Highways Department.

As per Rule 11 of the National Highways Fee (Determination of Rates and Collection) Rules, 2008, exemption from toll is admissible for private mechanical vehicles used for inspection, survey, construction, operation, and maintenance of national highways. Our Engineers, being directly involved in these critical functions, legitimately fall under this category.

It may also be noted that field engineers are generally not provided with official vehicles, and therefore use their personal vehicles to carry out inspections and monitoring duties. In the course of their work, they are often required to cross toll plazas multiple times a day, which results in considerable financial burden.

In view of the above, we earnestly request NHAI to grant zero FASTag / toll exemption passes for Engineers of the Tamil Nadu Highways Department. This will greatly facilitate the smooth discharge of their official duties and reduce unnecessary hardship.

We solicit your kind consideration and early approval of this request.

Thanking you,

Yours sincerely,

14.10.25

General Secretary

Copy to:

1. The Secretary to Government of Tamil Nadu, Highways & Minor Ports Department, Chennai -9 for your kind information.
2. The Director General, Highways Department, Chennai - 25 for your kind information.
3. The Project Directors National Highways Authority of India, Chennai-1, Chennai-2, Chengalpattu, Kancheepuram, Villupuram, Coimbatore, Trichy, Thanjavur, Madurai, Dindigul, Karaikudi, Ramathapuram, Thoothukudi, Tirunelveli and Nagercoil with request a consider plea.

**நகல்:**

# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்


'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பொறிஞர் **சே.இராமநாதன்,** பி.இ., | பொறிஞர் **ப.வீரமணி,** எம்.இ., எம்.பி.ஏ., | பொறிஞர் **சொ.தியாகராஜா,** எம்.இ |
| கைபேசி எண்: 88708 88918 | கைபேசி எண்: 97517 04393 | கைபேசி எண்: 98436 40475 |


கடித எண்.408/2025 நாள்: 14.10.2025

பெறுநர்

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,
பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009

ஐயா,

பொருள் : நெடுஞ்சாலைத்துறை - உதவிக் கோட்டப் பொறியாளர் காலிப் பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்குதல் - தொடர்பாக

வணக்கம்!

இன்றைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் பொறுப்பு வகித்த போது 2009ஆம் ஆண்டு 53 உதவிப் பொறியாளர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் பணி நியமன ஆணை பெற்று நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரிந்து வருகின்றனர். அந்த உதவிப் பொறியாளர்கள் 16 ஆண்டுகளாக உதவிப் பொறியாளர்களாகப் பணியாற்றி தங்களின் முதல் நிலை பதவி உயர்வான உதவிக் கோட்டப் பொறியாளர் பதவி உயர்வு ஆணையை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர். நெடுஞ்சாலைத்துறையில் உதவிப் பொறியாளர்கள் முதல் நிலை பதவி உயர்வினை பெறுவதற்குள் அவர்களின் பணி காலத்தில் பெரும் பகுதியை முடித்து, இன்னும் சில மாதங்களில் ஓய்வு பெறும் நிலையில் உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதே நேரத்தில், 2015ஆம் ஆண்டு இளநிலைப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற இளநிலை வரை தொழில் அலுவலர்கள் 10 ஆண்டுகள் முழுமையாக நிறைவடையாத நிலையில் இந்த ஆண்டு தோன்றியுள்ள உதவிக் கோட்டப் பொறியாளர் பதவி காலிப் பணியிடங்களுக்கு விதிகளுக்கு முரணாகப் பதவி உயர்வு வழங்கக்கோரி வருகின்றனர். நெடுஞ்சாலைத்துறை பொறியியல் பணிவிதிகளின்படி இளநிலைப் பொறியாளர்கள் அந்தந்த ஆண்டில் உருவாகும் உதவிக் கோட்டப் பொறியாளர் காலிப் பணியிடங்களில் நான்கில் மூன்று இடங்களை உதவிப் பொறியாளர்களைக் கொண்டும் ஒரு காலிப் பணியிடத்தை இளநிலைப் பொறியாளரைக் கொண்டும் பதவி உயர்வில் நிரப்பிட வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விதிகளுக்கு முரணாக உதவிக் கோட்டப் பொறியாளராகப் பதவி உயர்வு கோரும் இளநிலைப் பொறியாளர்களின் கோரிக்கையை கருத்திற் கொள்ளாமல் 16 ஆண்டுகளாகப் பதவி உயர்வுக்கு காத்திருக்கும் உதவிப் பொறியாளர்களுக்கு உதவிக் கோட்டப் பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கிட ஆணையிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி;

தங்கள் உண்மையுள்ள,

14.10.25

தலைவர்

15.10.25

பொதுச் செயலாளர்

## நகல்:

# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பொறிஞர் **சே.இராமநாதன்,** பி.இ., | பொறிஞர் **ப.வீரமணி,** எம்.இ., எம்.பி.ஏ., | பொறிஞர் **சொ.தியாகராஜா,** எம்.இ., |
| கைபேசி எண்: 88708 88918 | கைபேசி எண்: 97517 04393 | கைபேசி எண்: 98436 40475 |

கடித எண். 410/ 2025, நாள்: 14.10.2025

பெறுநர்

முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலைத்துறை,
கிண்டி,
சென்னை-25

ஐயா,

பொருள் : நெடுஞ்சாலைத்துறை - தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் - கோரிக்கைகள் - தொடர்பாக

வணக்கம்!

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்தால்தான், அதுவும் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கிய சீரான வளர்ச்சியை உறுதி செய்தால்தான் அகில இந்தியாவிலும் முதன்மை மாநிலம் என்கிற பெயரினைத் தமிழகம் பெற இயலும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அல்லும் பகலும் சிந்தித்துத் திட்டங்களைத் தீட்டி வருகிறார். பொருளாதார வளர்ச்சிக்குச் சாலை உள்கட்டமைப்பு மிகவும் முக்கியமானது. இந்திய அளவில் நெடுஞ்சாலைத்துறைக்கென்று தனியே ஒரு துறையை ஏற்படுத்தியவர் முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்! இதன் பயனாக மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழகத்தில்தான் அதிக அளவில் சாலைகள் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநிலத்தின் சாலை கட்டமைப்புகளைச் சிறப்பாக ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறையின் உதவிப் பொறியாளர் முதல் தலைமைப் பொறியாளர் வரை உள்ள அனைத்துப் பட்டதாரி பொறியாளர்களையும் உள்ளடக்கியது எங்கள் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம். எங்கள் சங்கத்தில் சுமார் 1600 உறுப்பினர்கள் உள்ளனர். தொடர்ந்து தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும் நெடுஞ்சாலைத்துறையின் ஏற்றத்திற்காகவும் நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

**கீழ்க்கண்ட முக்கிய கோரிக்கைகளைத் தங்களின் மேலான பார்வைக்குப் பணிவுடன் முன்வைக்கின்றோம்.**

1. **10ஆண்டுகள் பணி முடித்த பொறியாளர்களுக்கு தெரிவு நிலை ஆணை வழங்க வேண்டுதல்**

   1998 பணியில் சேர்ந்த பல பொறியாளர்கள் உதவிக் கோட்டப் பொறியாளராக பதவி உயர்வு பெற்று 10 ஆண்டுக்கு மேல் அப்பதவியில் பணிபுரிந்து ஓய்வு பெறும் நிலையில் உள்ளனர் அவர்களுக்கு உதவிக் கோட்டப் பொறியாளர் பதவியில் தேர்வு நிலை (Selection Grade) வழங்கப்படாமல் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது.

2. **முதுநிலை படித்த பொறியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டுதல்**

PG மற்றும் Ph.D முடித்தவர்களுக்கு ஊக்க ஊதிய உயர்வு மற்ற துறைகளில் நிதித்துறைக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நமது துறையில் இதற்கான முன்னெடுப்புகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

3. **தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் (TNRSP)**

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் (TNRSP) அலகில் மிகப் பெரிய சாலை உட்கட்டமைப்புகளை புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரைவாக அமைத்து மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பாக வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. எனவே, இவ்வலகில் புதிதாகப் பணிகளை தோற்றுவித்து பொறியாளர்களையும் பணியாளர்களையும் அதே அலகில் தொடர்ந்து பணிபுரிய நடடிவக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

4. **மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தில் அயற்பணியில் பொறியாளர்களை பணியமர்த்துவது**

புதிதாக அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தில் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் பணியிடங்களில் நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களை அயற்பணி மூலமாக பணியமர்த்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

5. **நெடுஞ்சாலைத்துறையில் உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு வாகனம் வழங்குதல்**

நெடுஞ்சாலைத்துறையில் தற்பொழுது கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் உள்ள உட்கோட்டங்களில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு வாகனங்கள் இருக்கின்றன. ஆனால் களப்பணிகளில் ஈடுபடும் மற்ற அலகுகளில் உள்ள உட்கோட்டங்களில் வாகன வசதி இல்லாததால் தொலைத்தூர களப்பணிகளை மேற்கொள்ள சிரமப்படுவதால் வாகன வசதி ஏற்படுத்தி தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

14.10.25 — தலைவர்

14.10.25 — பொதுச் செயலாளர்

Copy of:

**Association of Tamil Nadu Highway Engineers**

**Recognised in G.O Ms. No. 1814 Public (Services) Dept., Dated 21.05.1956**

**'Highway Engineers Home', 35v, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015**

Phone : 044 - 2230 0190 / 4312 3792, Email : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.cor

www.tnhighwaysengineers.com

| President | General Secretary | Treasurer |
|---|---|---|
| **Er.S.RAMANATHAN,** B.E., | **Er.P.VEERAMANI,** M.E., M.B.A., | **Er.S.THIYAGARAJA,** M.E., |
| Mobile No.: 88708 88918 | Mobile No.: 97517 04393 | Mobile No.: 98436 40475 |


**Letter No.411/ATNHE/ 2025** **dated 14.10.2025**

**To**

1. **The Secretary to Government,**
   **Highways & Minor Ports Department,**
   **Fort St. George,**
   **Chennai – 600 009**

2. **The Director General,**
   **Highways Department,**
   **Chennai – 600 025**

**Sir,**

**Sub: Highways Department – Promotion to the post of Assistant Divisional Engineer – Consideration of eligible 2009 Batch Assistant Engineers – Earnest and humble request – Regarding.**

we submit this representation for your kind consideration regarding the promotion of eligible 2009 batch Assistant Engineers to the post of Assistant Divisional Engineer (ADE).

We take this opportunity to express our sincere gratitude to the Government for its unwavering support and guidance to the engineering community. We now seek your benevolent intervention to resolve the long-pending issue of promotions, in accordance with the established service rules.

**1. Present Vacancy Position**

As on date, there are about 53 vacancies in the cadre of Assistant Divisional Engineer across the State.

As per Rule 9 of the Tamil Nadu Highways Engineering Service Rules, the posts of ADE are to be filled by promotion in the ratio of 3:1 between Assistant Engineers and Junior Engineers, subject to both categories having eligible officers.

However, a substantial number of 2009 batch Assistant Engineers, who have rendered over years of continuous and unblemished service, remain without their first promotion. This prolonged stagnation has resulted in significant professional and personal hardship.

**2. Governing Rules and Eligibility**

As per G.O.Ms.No.49, Highways & Minor Ports (HN2) Department, dated 02.04.2018, the eligibility criteria for promotion are as follows:

- Assistant Engineers: Minimum of 5 years of service with B.E. / AMIE (Civil) qualification.
- Junior Engineers: Minimum of 10 years of service with Diploma in Civil Engineering.

The 2009 batch Assistant Engineers have already completed thrice the required qualifying service and fully satisfy the conditions for promotion.

In contrast, Junior Engineers promoted from Junior Draughting Officer in 2015 are yet to complete the mandatory 10 years of qualifying service, becoming eligible only after July 2025. Hence, they cannot be considered for inclusion in the current promotion panel.

**3. Legal and Administrative Position**

The Hon'ble Madras High Court, in the case of T. Malarvizhi v. State of Tamil Nadu, has categorically held that the 10-year qualifying service for Junior Engineers is mandatory and not subject to relaxation.

Further, under Section 41(1) of the Conditions of Service act, 2016 when one feeder category lacks eligible officers, vacancies may be filled from the other eligible feeder category.

This principle has been consistently upheld through administrative precedent and judicial interpretation, ensuring both continuity in departmental functioning and avoidance of stagnation.

It is therefore both lawful and justified to fill the current ADE vacancies by promoting eligible Assistant Engineers until Junior Engineers attain eligibility.

**4. Long-Pending Hardship**

The 2009 batch Assistant Engineers have been discharging their duties with dedication and integrity for over 16 years, often under demanding field

conditions. Despite fulfilling all eligibility norms, they continue to await their first promotion, resulting in:

- Severe career stagnation and loss of advancement opportunities.
- Decline in morale and motivation among committed officers.
- Psychological stress affecting professional performance.

We humbly submit that "justice delayed is justice denied." Timely recognition of merit and service is essential to restore morale and maintain institutional efficiency.

**5. Our Humble Request**

In light of the above facts, governing rules, and legal precedents, we most respectfully and earnestly request that:

1. The existing approximately for year of 2024-25 53 numbers ADE vacancies be filled by promoting the eligible 2009 batch Assistant Engineers without further delay.
2. A clear record be maintained that no Junior Engineer is currently eligible, and hence, the JE quota may be temporarily operated by Assistant Engineers, in accordance with Section 41(1) of Conditions of Service Act, 2016.
3. Promotion orders be issued at the earliest to ensure equity, administrative continuity, and morale across the department.

**6. Closing Submission**

Sir, we place our full faith in your leadership and fairness, and we sincerely hope that our long-pending representation may kindly be considered.

We remain ever grateful for the Government's continued support to the engineering fraternity, and we respectfully seek your kind orders for the early promotion of our eligible members.

Yours faithfully,

14.10.25
**President**

14.10.25
**General Secretary**

## நகல்:

# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 01
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பொறிஞர் **சே.இராமநாதன்,** பி.இ., | பொறிஞர் **ப.வீரமணி,** எம்.இ., எம்.பி.ஏ., | பொறிஞர் **சொ.தியாகராஜா,** எம்., |
| கைபேசி எண்: 88708 88918 | கைபேசி எண்: 97517 04393 | கைபேசி எண்: 98436 40475 |


கடித எண்.412/ 2025, நாள்: 14.10.2025

பெறுநர்
முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலைத்துறை,
கிண்டி, சென்னை-25

ஐயா,

பொருள் : நெடுஞ்சாலைத்துறை - தரக்கட்டுப்பாடு உட்கோட்டங்களில் கூடுதலாக உதவிப் பொறியாளர்களை நியமித்தல் - தொடர்பாக

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்.52, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.கே-2)துறை, நாள்: 17.03.2025

வணக்கம்.

பார்வையிற் கண்ட அரசாணையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறையில் திட்டங்கள் அலகைச் சார்ந்த தரக்கட்டுப்பாடு பணிகள் 4 திட்டங்கள் தரக்கட்டுப்பாடு உட்கோட்டங்களை மட்டும் கொண்டு தமிழ்நாடு முழுவதும் பரந்த எல்லைக்குட்பட்ட திட்டங்கள் அலகின் பணிகளை மேற்கொள்வதில் நிர்வாக சிரமம் ஏற்படுவதால் மேற்குறிப்பிட்ட திட்டங்கள் அலகிற்கான தரக்கட்டுப்பாடு பணிகளை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கட்டுப்பாட்டின்கீழ் வரும் தரக்கட்டுப்பாடு உட்கோட்டங்களின் மூலம் தரக்கட்டுப்பாடு பணிகளை மேற்கொள்ளலாம். எனவே, திட்டங்கள் அலகைச் சார்ந்த 4 தரக்கட்டுப்பாடு உட்கோட்டங்களையும் முடிவுக்குக் கொண்டு வந்து மறுபணியமர்வில் (மேற்காணும்) புதிய தரக்கட்டுப்பாடு உட்கோட்டங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாணை மூலம் திட்டங்கள் அலகின் தரக்கட்டுப்பாடு பணிகளை மற்ற அலகுகளின் தரக்கட்டுப்பாடு பணிகளுடன் இணைத்திருப்பது திட்டங்கள் அலகு மேற்கொண்டு வரும் மிக உயர்ந்த தொழிற்நுட்பம் சார்ந்த பணிகளின் தரத்தினை

மேலாண்மை செய்வதைச் சிரமமாக்கிவிடும். உயர் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்திச் செயலாக்கம் செய்யப்பட வேண்டிய பெரிய பணிகளை பார்வையிடவே திட்டங்கள் அலகு தமிழக அரசினால் தோற்றுவிக்கப்பட்டது. கோவை, சேலம், விழுப்புரம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற மாநகராட்சிகளில் பறக்கும் சாலைகள், மேம்பாலங்கள் (Grade Separator) முக்கிய தாலுக்காகளில் உள்ள நகரங்களில் அரைவட்டச் சாலைகள், இரயில்வே கடவுகளில் உயர்மட்டப் பாலங்கள் போன்ற பணிகள் திட்டங்கள் அலகில் 50 கோடி முதல் 500 கோடி வரை மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. உதவிப் பொறியாளர்கள், உதவிக் கோட்டப் பொறியாளர்கள் இரவும் பகலும் களப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், களப் பொறியாளர்கள் எண்ணிக்கை எற்கெனவே மிகக் குறைவாக உள்ளது.

கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் போன்ற அலகின் பணிகளுடன் கூடுதலாக திட்டங்கள் பணிகளைச் சேர்த்துத் தர ஆய்வு செய்ய வேண்டியுள்ளதால் அதிக அளவில் களப் பொறியாளர்கள் திட்டப் பணிகளின் தரத்தினை குறிப்பிட்ட கால அளவிற்குள் ஆய்வு செய்து முடிக்க இயலாத நிலை உள்ளது. இதனால், அடுத்தடுத்த பணிகளைத் தொடர்ந்து செய்திட ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய அனுமதி காலதாமதம் ஆகிறது. பணிகள் நிறைவடைவது மிகுந்த தாமதமாகி பொதுமக்களும் இன்னலுக்குள்ளாகின்றனர்.

எனவே, திட்டங்கள் அலகின் மூலம் மேற்கொள்ளப்படும் பெரிய பணிகளின் தரக்கட்டுப்பாட்டினை மேற்பார்வையிடத் தனியே உதவிப் பொறியாளர்களையும், உதவிக் கோட்டப் பொறியாளர்களையும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் கட்டுப்பாட்டிலேயே நியமித்திட உரிய அரசாணை பெறுவதற்கு ஆவன செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள,

14.10.25
தலைவர்

14.10.25
பொதுச் செயலாளர்

## நகல்:


# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பொறிஞர் **சே.இராமநாதன்,** பி.இ., | பொறிஞர் **ப.வீரமணி,** எம்.இ., எம்.பி.ஏ., | பொறிஞர் **சொ.தியாகராஜா,** எம்.இ., |
| கைபேசி எண்: 88708 88918 | கைபேசி எண்: 97517 04393 | கைபேசி எண்: 98436 40475 |


கடித எண்.414/ 2025, நாள்: 29.10.2025

பெறுநர்

முதன்மை இயக்குநர்,
நெடுஞ்சாலைத்துறை,
கிண்டி, சென்னை-25

ஐயா,

பொருள் : நெடுஞ்சாலைத்துறை - களப்பணிகள் மேற்கொள்ளும் அனைத்து உட்கோட்டங்களுக்கும் - ஈப்பு வாகனம் வழங்குதல் - தொடர்பாக

வணக்கம்!

நெடுஞ்சாலைத்துறையில் தற்பொழுது கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, தரக்கட்டுப்பாடு, சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம், தேசிய நெடுஞ்சாலைகள் போன்ற அலகில் உள்ள பெரும்பாலான உட்கோட்டங்களில் களப்பணி மேற்கொள்வதற்கு ஈப்பு வாகன வசதிகள் இருக்கின்றன. குறிப்பாக சில உட்கோட்டங்களிலும் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட உட்கோட்டங்களிலும் ஈப்பு வாகனங்கள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் திட்டங்கள், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம், சாலை பாதுகாப்பு அலகு மற்றும் பாலங்கள் ஆய்வு அலகு போன்ற அலகுகளில் தலா அதிகபட்சமாக மூன்று மாவட்டங்களில் வரை ஒரு உட்கோட்டம் இருப்பதால் அவர்கள் பேருந்தில் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டடங்கள் மற்றும் களப்பணிகள் குறித்த நேரத்தில் பணிகளை ஆய்வு செய்ய இயலவில்லை. இதனால் பொறியாளர்கள் துரித நேரத்தில் பணிகளை முடித்து விட்டு தலைமையிடம் திரும்ப மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வேளாண்மைத் துறை போன்ற துறைகளில் அனைத்து உட்கோட்டங்களுக்கு ஈப்பு வாகனம் உள்ளது. அதே போல் நெடுஞ்சாலைத்துறையில் அனைத்து உட்கோட்டங்களில் ஈப்பு வாகனம் வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையச் சாலையில் களப்பணிகள் மேற்கொள்ள தனியார் வாகனங்களில் பயணம் செய்வதால் சுங்கச் சாவடியில் சுங்க வரி செலுத்த வேண்டிய நிலை உள்ளது. இதனால் கூடுதல் நிதிச்சுமை பொறியாளர்களுக்கு ஏற்படுகிறது.

தற்பொழுது உள்ள ஈப்பு வாகனங்கள் 16 ஆண்டுகளுக்கு மேல் ஆன ஈப்பு வாகனங்கள் ஆய்வு பணிக்கு செல்லும்போது அடிக்கடி பழுதாகிவிடுகிறது. ஆகையால் பழைய ஈப்பு வாகனங்கள் திரும்ப பெற்று புதிய ஈப்பு வாகனங்கள் வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும், திட்டப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் செலவினங்கள் போக மீதமுள்ள தொகையை அரசின் அனுமதி பெற்று புதிய ஈப்பு வாகனங்கள் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆகையால், களப்பணிகளை மேற்கொள்ளும் அனைத்து உட்கோட்டங்களுக்கும் வாகன வசதி ஏற்படுத்தி பொறியாளர்களின் சிரமங்களை போக்கிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

பொதுச் செயலாளர்

Copy of:

# Association of Tamil Nadu Highway Engineers

**Recognised in G.O Ms. No. 1814 Public (Services) Dept., Dated 21.05.1956**
**'Highway Engineers Home', 35v, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015**
Phone : 044 - 2230 0190 / 4312 3792, Email : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
www.tnhighwaysengineers.com

| President | General Secretary | Treasurer |
|---|---|---|
| **Er.S.RAMANATHAN,** B.E., | **Er.P.VEERAMANI,** M.E., M.B.A., | **Er.S.THIYAGARAJA,** M.E., |
| Mobile No.: 88708 88918 | Mobile No.: 97517 04393 | Mobile No.: 98436 40475 |

**Letter No. 415/ATNHE/2025** **Dated: 30.10.2025**

**To**

1. **The Secretary to Government,**
   **Finance Department,**
   **Secretariat,**
   **Chennai – 600 009.**

2. **The Commissioner of Treasuries & Accounts,**
   **3rd Floor, Perasiriyar Anbazhagan Malaigai,**
   **No.571, Anna Salai, Nandanam,**
   **Chennai – 600 035.**

**Sir,**

**Sub : Fixation of Pay Scale – Newly Promoted Assistant Divisional Engineers – Implementation of Court Order – Request for withdrawal of letter dated 05.01.2023 – Regarding.**

Ref :
1. Order of the Hon'ble High Court of Madras in W.P. No.20397 of 2020, dated 04.04.2024.
2. Letter No.36432/CMPC/2022-2, dated 05.01.2023, from the Additional Chief Secretary to Government, Finance (CMPC) Department.
3. Our letter No.007-1/ATNHE/2024, dated 03.07.2024.

We invite your kind attention to the subject cited above regarding the fixation of pay scales for newly promoted Assistant Divisional Engineers and Divisional Engineers as per the 6th Pay Commission.

In this connection, we wish to submit the following for your kind consideration:

- The Hon'ble High Court of Madras, in its order dated 04.04.2024 in W.P. No.20397 of 2020, has set aside all Government Orders issued subsequent to G.O.Ms.No.283, Finance (Pay Cell) Department, dated 26.08.2010 (issued based on the One Man Commission report), in respect of fixation of pay scales for Assistant Engineers, Assistant Divisional Engineers and Divisional Engineers.

- As per the above Court Order, the pay scales applicable to Engineers under the 6th Pay Commission are as follows:

| S.No. | Designation | Pay Scale |
|---|---|---|
| 1 | Assistant Engineer | Rs.15600–39100 + Grade Pay Rs.5400 |
| 2 | Assistant Divisional Engineer | Rs.15600–39100 + Grade Pay Rs.6600 |
| 3 | Divisional Engineer | Rs.15600–39100 + Grade Pay Rs.7600 |

- The Hon'ble Court has also restricted the migration to the 7th Pay Commission scales based on G.O.Ms.No.404, Finance (Pay Cell) Department, dated 12.11.2020, which had sought to revise the pay scales for Engineers under the 6th Pay Commission.
- Following the judgment, the Commissioner of Treasuries and Accounts has requested clarification regarding the implementation of the above Court Order. However, it is understood that such clarification is still awaited.
- It is also submitted that no order has been passed in the Writ Appeal filed against the judgment dated 04.04.2024, and hence, the said judgment holds good and remains in force.

In view of the above, we request that necessary clarification may kindly be issued to all Treasury and Pay and Accounts Officers to permit the Engineers concerned to continue under the 6th Pay Commission and to draw their salaries accordingly, until further orders.

We therefore also request that the Finance Department's letter dated 05.01.2023 may kindly be withdrawn, in compliance with the Hon'ble High Court's order dated 04.04.2024.

Thanking you,

Yours faithfully,

20.10.25

General Secretary

**Copy to:** The Secretary to Government, Highways & Minor Ports Department, Secretariat, Chennai – 600 009.

Copy of:

Email : gsaoe.pwd@gmail.com Tel : 044-2851 5445 / 2951 0445

**TAMILNADU ENGINEERS' FEDERATION**

(A Common Forum of Graduate Engineers of all the Government Department, Board and Corporations)

Tamilnadu PWD Compund, Chepauk, Chennai-600005

**President**
Er.B.Dhanaseelan (Highways)
Cell : 7338931241

**Vice President**
Er.V.Shanmuga (TNEB)
Cell : 9442396962

**General Secretary**
Er.M.Dhanasekaran (TNPWD & WRD)
Cell : 9159590071

**SECRETARIES**

Er.S.Prakash (RD)
Cell : 9488666555

Er.C.Hemachandran (MTC)
Cell : 9551160260

Er.R.Dhanasekar (GCC)
Cell : 9444150966

Er.P.T.V.Suresh Kumar (Metro Water)
Cell : 9962511899

**Treasurer**
Er.V.Ponraj (TNPWD & WRD)
Cell : 9380562186

**Internal Auditor**
Er.G.Tamilselvam (Agri.Engg.)
Cell : 9444073322

கடித எண்.01/ பொ.கூ./2025 நாள் : 14.10.2025

**பெறுநர்**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்,
தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம்,
சென்னை - 600009

பெருமதிப்பிற்குரிய அய்யா,

பொருள்: தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு - சார்பாக உதவிப் பொறியாளர், உதவிச் செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஊதியவிகித முரண்பாடுகள் களைவது தொடர்பான வேண்டுகோள் - சமர்ப்பித்தல்.

....

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பில் பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரகவளர்ச்சித்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, வேளாண்மை பொறியியல், குடிநீர் வடிகால் வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் மற்றும் கழகங்கள், வாரியங்கள் சார்ந்த உதவிப் பொறியாளர் முதல் தலைமை பொறியாளர் வரை என அனைவரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

இத்தகைய தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு, இந்திய பொறியாளர் கூட்டமைப்பின் அங்கமாகவும் செயல்பட்டுவருகிறது. எங்கள் கூட்டமைப்பின் சார்பாக நீண்ட காலமாக வேண்டபட்டுவரும் கீழ்க்கண்ட கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து நிறைவேற்றித் தர வேண்டுகிறோம்.

உதவிப் பொறியாளர், உதவிச் செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் போன்ற பொறியாளர் பதவி இனங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2009ஆம் ஆண்டு வழங்கப்பட்ட உரிய ஊதிய விகிதம் அதன்பின் அமைக்கப்பட்ட ஊதியகுழுக்களினால் இதுவரை வழங்கப்படவில்லை என தங்களின் கனிவான பார்வைக்கு மீண்டும் சமர்பிக்கின்றோம்.

பொறியாளர்களின் கல்வித்தகுதி, தேர்வுமுறை மற்றும் இணையான கல்வித் தகுதி உடையோரின் ஊதியம் ஆகியவற்றை ஒப்பீடு செய்து கடந்த 2010-ஆம் ஆண்டு தமிழக முன்னாள் முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் பொறியாளர்களுக்கு கீழ்க்கண்ட ஊதிய விகிதம் வழங்கப்பட்டது.

| வ.எண். | பதவி | ஊதிய விகிதங்கள் |
|---|---|---|
| 1 | **உதவிப் பொறியாளர்** | ரூ.15600 - 39100 + 5400 (GP) |
| 2 | **உதவிச் செயற்பொறியாளர்** | ரூ.15600 - 39100 + 6600 (GP) |
| 3 | **செயற்பொறியாளர்** | ரூ.15600 - 39100 + 7600 (GP) |

6-வது ஊதியக் குழுவின் போது அமைக்கப்பட்ட ஒருநபர் குழு மத்திய அரசின் பொதுப்பணித்துறை நேரடி நியமன பொறியாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விகிதத்தை மாநில அரசின் பொறியாளர்களுக்கு நிர்ணயித்து, மேற்கண்ட ஊதிய விகிதத்தை நிர்ணயித்தது. அவ்வாறு வழங்கப்பட்ட மேற்கண்ட நியாயமான ஊதிய விகிதத்தை தன்னிச்சையாக அரசாணை நிலை எண்.71, நிதித் (ஊதியப் பிரிவு) துறை, நாள் 26.02.2011ன் மூலம் குறைத்ததும் பின் இரண்டாண்டுகள் கழித்து அரசாணை எண்.242, நிதித் (ஊதிய குழு) துறை, நாள்: 22.07.2013-இல் மிகவும் குறைத்தும் பின்வரும் ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

| வ. எண். | பதவி | 2010ல் ஒரு நபர் குழுவில் பரிந்துரைத்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழங்கிய ஊதிய விகிதம் | அரசாணை எண்.242ற்குப்பின் குறைத்து நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் | ரூ.15600 - 39100 + 5400 (GP) | ரூ.9300 - 34800 + GP5100 |
| 2 | உதவிச் செயற்பொறியாளர் | ரூ.15600 - 39100 + 6600 (GP) | ரூ.15600 - 39100 + GP5400 |
| 3 | செயற்பொறியாளர் | ரூ.15600 - 39100 + 7600 (GP) | ரூ.15600 - 39100 + GP6600 |

இத்தகைய ஊதிய நிர்ணயித்தலில் மத்திய அரசின் பொதுப்பணித்துறை பொறியாளர்களுக்கு ஊதிய வழங்க பரிசீலிக்கப்பட்ட காரணிகள் மாநில அரசின் பொறியாளர்களுக்கு ஊதிய நிர்ணயிப்பதற்கு முறையாக பரிசீலிக்காததே இதற்கு காரணம்.

இதற்கு எதிராக, தடையாணை பெற்று உச்சநீதிமன்றம் வரை சென்று குறைதீர்க்க ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் ஊதிய குறைதீர்ப்புகுழு - 2019 அமைக்கப்பட்ட போது தீர்வு கிடைக்கும் என நினைத்திருந்த வேளையில், எந்த அரசாணைக்கு தடை வழங்கப்பட்டதோ அதே அரசாணையை குழுவின் பரிந்துரையாக பெற்று மீண்டும் பொறியாளர்களின் ஊதிய விகிதத்தை குறைத்திட அரசாணை எண்.399 நாள் 2019 வெளியிடப்பட்டது. இதன் மூலம் பெரும்பான்மையான உதவிப் பொறியாளர்கள் தங்கள் மாத ஊதியத்தில் ரூ.20,000/- வரை குறைவாகப் பெறும் சூழல் ஏற்பட்டது.

இந்த ஊதிய குறைப்பிற்கு எதிராக மீண்டும் ஒருமுறை நீதிமன்றத்தை நாடியதில் சென்னை உயர்நீதிமன்றம் 4.4.2024 அன்று தடையாணை வழங்கியதுடன், ஆறாவது ஊதியக்குழுவின் படியான ஊதிய விகிதம் தொடர்பான முரண்பாடுகளை களையவும் இப்பொருள் தொடர்பாக மீண்டும் ஒருமுறை முறையாக பரிசீலிக்கவும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு.சத்திய நாராயணா தலைமையில் ஒரு புதிய குழு அமைக்க உத்தரவும் பிறப்பித்துள்ளது.

ஊதிய விகிதம் தொடர்பான முரண்பாடுகள் ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்துவருவதால் எங்கள் பொறியாளர் இன்றுவரை 6வது ஊதியக்குழுவின் ஊதிய விகிதத்தினை பெற்று வருகின்றனர். ஏறத்தாழ 7 ஆண்டுகளாக ஏழாவது ஊதியக்குழு விகிதங்கள் பொறியாளர்களுக்கு மட்டும் வழங்கப்படவில்லை என்பதையும் இதனால் மாதந்தோறும் ரூ.20,000/- வரை பொறியாளர்களுக்கு இழப்பு ஏற்படுகிறது என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எனவே மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் 04.04.2024 அன்று WP20401/2020 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் கூறியபடி "பொறியாளர்களின் ஊதியவிகிதத்தை நிர்ணயிப்பதில், கல்வித்தகுதி, தேர்வுமுறை, சமமான பதவி இனங்கள், நிகரான மத்திய அரசுபணி ஆகியவற்றின் தாக்கத்தினை முறைப்படி ஆராய்ந்திட ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு திரு.சத்திய நாராயணா தலைமையில் ஊதிய குறை தீர்ப்புகுழு 2024 அமைத்திட நிதித்துறைக்கு பரிந்துரை செய்ததை தவிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட நீதிமன்ற உத்தரவுக்கு மேல்முறையீட்டை தவிர்த்து மேற்படி குழு அமைத்திடவும், நீண்ட காலமாக தொடரும் ஊதிய முரன்பாடுகளை களைந்திடவும் உரிய நடவடிக்கை எடுத்திட நிதித்துறையை வலியுறுத்தவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு தமிழக முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் டாக்டர் கருணாநிதி** அவர்களால் வழங்கப்பட்டு நீதிமன்ற உத்தரவுகள் மூலம் கடந்த 2010 ஆண்டு முதல் பொறியாளர்கள் பெற்று வரும் ஊதியம் தொடர்பான முரண்பாடுகளை களைந்திடவும் அதன் தொடர்ச்சியாக ஏழாவது ஊதியக்குழு ஊதிய விதிதங்களை பொறியாளர்கள் பெற்றிடவும் நீதிமன்றம் வழங்கிய 04.04.2024யின் ஆணைப்படி **ஊதிய குறைதீர்ப்பு குழு (PGRC** 2024**)** அமைத்திட உரிய அரசாணை பெற உதவுமாறு மீண்டும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மிக்க அன்புடன்,

தங்கள் உண்மையுள்ள,

**பொறி.மு.தனசேகரன்,**
பொதுச் செயலாளர், பொறியாளர் கூட்டமைப்பு

Copy of:

©
Government of Tamil Nadu
2025

MANUSCRIPT SERIES

**FINANCE [Allowances] DEPARTMENT**
**G.O.(Ms).No.229, Dated: 15th October 2025.**
*(புரட்டாசி–29, திருவள்ளுவர் ஆண்டு 2056)*

**ABSTRACT**

**Provident Fund** - General Provident Fund (Tamil Nadu) – Rate of interest for the financial year 2025-2026 with effect from 01.10.2025 to 31.12.2025 - Orders – Issued.

---

**Read the following:-**

1. G.O.Ms.No.83, Finance (Allowances) Department, dated.07.04.2025
2. G.O.Ms.No.163, Finance (Allowances) Department, dated.15.07.2025
3. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi, Resolution F.No.5(3)-B(PD)/2023, dated: 10.10.2025.

-oOo-

**ORDER:**

In the Government Orders first and second read above, orders were issued fixing the rate of interest on the accumulation at the credit of the subscribers of General Provident Fund (Tamil Nadu) as detailed below:

| Sl.No. | Quarter | Period | Financial Year | Rate of Interest |
|---|---|---|---|---|
| 1 | I | 01.04.2025 to 30.06.2025 | 2025 - 2026 | 7.1% |
| 2 | II | 01.07.2025 to 30.09.2025 | 2025 - 2026 | 7.1% |

2. The Government of India, in its resolution third read above, announced that during the Financial year 2025-2026, accumulations at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7.1% (Seven point one percent) with effect from 1st October 2025 to 31st December 2025 (Q3).

3. Accordingly, Government direct that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund (Tamil Nadu) shall carry interest at the rate of **7.1%** (Seven point one percent) with effect from 1st October 2025 to 31st December 2025 (Q3).

4. The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rates as ordered in para-3 above.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**T. UDHAYACHANDRAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**To**

All Departments Additional Chief Secretary/Principal Secretary/Secretary to Government, Chennai-9.
The Principal Secretary, Legislative Assembly Secretariat, Chennai-9.
The Principal Secretary to Governor, Chennai-22.
The Comptroller, Governor's Household, Raj Bhavan, Chennai-22.
The Governor's Secretariat, Raj Bhavan, Guindy, Chennai-22.
The Director General of Audit (FAC), Perasiriyar K.Anbazhagan Maaligai, Chennai-35.
All Heads of Departments.
The Tamil Nadu Information Commission, Chennai-18.
All Departments of Secretariat (OP/Bills).
All Collectors / All District Judges / All Chief Judicial Magistrates.
The Accountant General (Accounts and Entitlements), Chennai-18.
The Principal Accountant General (Audit-I), Chennai-18.
The Accountant General (Audit II), Chennai-18.
The Accountant General (CAB), Chennai -9 / Madurai.
The Director (FAC) of Treasuries and Accounts, Chennai-35.
All Pay and Accounts Officers.
All Treasury Officers / All Sub-Treasury Officers.
The Chairman, Tamil Nadu Public Service Commission, Chennai-3.
The Commissioner of Tribunal for Disciplinary Proceedings, Chennai-108.
The Registrar General, High Court, Chennai-104.
The Registrars of all Universities / Agricultural University, Coimbatore.
All State owned Corporations and Statutory Boards.
The Commissioner, Greater Chennai Corporation, Chennai-3.
All Commissioners, Corporation of Madurai / Coimbatore / Tiruchirappalli / Salem / Tirunelveli / Erode / Tiruppur / Thoothukudi / Thanjavur / Kumbakonam / Vellore / Dindigul / Nagarcoil / Hosur / Avadi/ Kanchipuram/ Karur/ Cuddalore / Sivakasi / Tambaram / Karaikudi / Namakkal / Pudukottai / Tiruvannamalai.
All Assistant Directors (Rural Development).
All Tahsildars.
All Block Development Officers.
All Municipal Commissioners.
All Revenue Divisional Officers.
All Chief Educational Officers.

**Copy to:**

The Principal Secretary to Hon'ble Chief Minister, Chennai-9.
The Secretary - II to Hon'ble Chief Minister, Chennai-9.
The Secretary - III to Hon'ble Chief Minister, Chennai-9.
The Joint Secretary to Hon'ble Chief Minister, Chennai-9.
The Additional Chief Secretary to Hon'ble Deputy Chief Minister, Chennai-9.
The Joint Secretary to Hon'ble Chief Minister, Chennai-9.
The Special Personal Assistant to Hon'ble Chief Minister, Chennai-9.

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம், தருமபுரி மாவட்டக் கிளைச் சங்க கூட்டம்

**நாள்: 13.10.2025**

**நெடுஞ்சாலைத் துறை பயணியர் மாளிகையில் மாலை 6.00 மணியளவில் நடந்த தருமபுரி மாவட்ட கிளை சங்ககூட்டத்தில் கீழ்கண்ட பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் பதவி |
|---|---|
| 1 | பொறிஞர் என்.ஜெய்சங்கர்,உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, அரூர் |
| 2 | பொறிஞர் எஸ்.அருட்செல்வன், உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, பாலக்கோடு |
| 3 | பொறிஞர் பி.நரசிம்மன், உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, பாப்பிரெட்டிப்பட்டி |
| 4 | பொறிஞர் ஆர்.ரஞ்சித், உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, பாலக்கோடு |
| 5 | பொறிஞர் ஆர்.சிங்காரவேலு, உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, தருமபுரி |
| 6 | பொறிஞர் வி.மதன்குமார், உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, தருமபுரி |
| 7 | பொறிஞர் அ.அருணா, உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, நல்லம்பள்ளி |

**இக்கிளை சங்க கூட்டத்தில் தருமபுரி மாவட்டகிளை சங்க நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

| தலைவர் | செயலாளர் | செயற்குழு உறுப்பினர்கள் |
|---|---|---|
| **பொறிஞர் பி.நாகராஜீ,**<br>கோட்டப் பொறியாளர்<br>கட்டுமானம் (ம) பராமரிப்பு,<br>தருமபுரி | **பொறிஞர் என்.ஜெய்சங்கர்,**<br>உதவிக் கோட்டப் பொறியாளர்<br>கட்டுமானம் (ம) பராமரிப்பு,<br>அரூர் | **பொறிஞர் வி.கோவிந்தசாமி,**<br>உதவிக் கோட்டப் பொறியாளர்,<br>நபார்டு (ம) கிராமச் சாலைகள்,<br>தருமபுரி<br><br>**பொறிஞர் ஆர்.ரஞ்சித்குமார்,**<br>உதவிப் பொறியாளர்,<br>கட்டுமானம் (ம) பராமரிப்பு,<br>பாலக்கோடு<br><br>**பொறிஞர் க.த.மன்னர் மன்னன்,**<br>உதவிப் பொறியாளர்,<br>தரக்கட்டுபாடு,<br>தருமபுரி |

**தேர்ந்தெடுக்கப்பட்ட தருமபுரி மாவட்ட கிளை சங்க தலைவர் தலைமையில், மாநில செயலாளர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பொறியாளர்களின் கருத்திற்கிணங்க கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.**

1. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு திட்டம் (TNRSP) அலகில் மிகப் பெரிய சாலை அனைத்து பொறியாளர்களுக்கும் மாதப் பயணப்படியாக ரூபாய் 5000 வழங்க வேண்டும்.

2. அனைத்து உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள் ஆகியோர்களுக்கு வேலைத்தளத்திற்கு சென்றுவர ஈப்பு வழங்க வேண்டும்.

3. 2009ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த உதவிப் பொறியாளர்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக பதவி உயர்வு இல்லாமல் இருப்பதாக உடனடி பதவி உயர்வு கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

.4. அனைத்து வகையான கோப்புகள், புள்ளி விவரங்கள், மதிப்பீடுகள் போன்ற அனைத்து பணிகளையம் தயாரிக்கும் உதவிப் பொறியாளர் அலுவலகத்திற்கு அலுவலக உதவியாளர், இளநிலை வரை தொழில் அலுவலர், இளநிலை உதவியாளர் ஆகிய பணியிடங்கள் உருவாக்கிட நடடிவக்கை எடுக்க வேண்டும்.

5. அனைத்து பொறியாளர்களின் ஊதிய முரண்பாடுகளை சீர்செய்திட உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. திறன்மிகு உதவியாளர்கள் (சாலை ஆய்வாளர்கள்) ஒவ்வொரு மாதமும் நாட்குறிப்பில் குறிப்பிடும் மிதிவண்டி சான்றிதழை நீக்க வேண்டும்.

**(பி. நாகராஜ்)**
தலைவர்

**(என்.ஜெய்சங்கர்)**
செயலாளர்

---

**தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்,**
**திருச்சிராப்பள்ளி மாவட்டக் கிளைச் சங்க கூட்டம்**

**நாள்: 29.10.2025**

**நெடுஞ்சாலைத் துறை பயணியர் மாளிகையில் மாலை 6.00 மணியளவில் நடந்த திருச்சிராப்பள்ளி மாவட்ட கிளை சங்ககூட்டத்தில் கீழ்கண்ட பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.**

1 பொறிஞர் ஜெ.கண்ணன்,
கோட்டப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, திருச்சிராப்பள்ளி.

2 பொறிஞர் செ.சண்முகசுந்தரபூபதி,
உதவி இயக்குநர், மண்டல ஆய்வகம், திருச்சிராப்பள்ளி.

3 பொறிஞர் ஜி.நல்லதம்பி,
உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, துறையூர்.

4 பொறிஞர் வி.ரவிக்குமார்,
உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, மணப்பாறை.

5 பொறிஞர் எஸ்.சிட்டிபாபு,
உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, லால்குடி.

6 பொறிஞர் எஸ்.ஜோதிபாசு,
உதவிக் கோட்டப் பொறியாளர், தரக்கட்டுப்பாடு, திருச்சிராப்பள்ளி.

7 பொறிஞர் ஜெ.சோலைமுருகன்,
உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, துறையூர்.

8 பொறிஞர் ஆர்.செந்தில்குமரன்,
உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, மணப்பாறை.

9 பொறிஞர் தோ.சமயசக்தி,
உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு,
திருச்சிராப்பள்ளி மேற்கு.

10 பொறிஞர் டி.ஆர்.தங்கராஜு,
உதவிப் பொறியாளர், நபார்டு (ம) கிராமச் சாலைகள்,
வட்ட அலுவலகம், திருச்சிராப்பள்ளி

11 பொறிஞர் எம்.துரைராஜு,
உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, மருங்காபுரி.

12 பொறிஞர் சி.நடராஜன்,
உதவிப் பொறியாளர், தரக்கட்டுப்பாடு, புதுக்கோட்டை.

13 பொறிஞர் எம்.கௌதம்,
உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு,
திருச்சிராப்பள்ளி கிழக்கு.

14 பொறிஞர் நெ.திலகவதி,
உதவிப் பொறியாளர், மண்டல ஆய்வகம், திருச்சிராப்பள்ளி.

15 பொறிஞர் ஆர்.லியோபிரதாப்,
உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, முசிறி.

16 பொறிஞர் என்.பரத்குமார்,
உதவிப் பொறியாளர், நபார்டு (ம) கிராமச் சாலைகள், மணப்பாறை.

17 பொறிஞர் வி.ஹரிஷ்கண்ணா,
உதவிப் பொறியாளர், கட்டுமானம் (ம) பராமரிப்பு, உப்பிலியாபுரம்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில நிர்வாகிகளான **செயலாளர்:- பொறிஞர் எஸ்.ஜோதிபாசு, செயற்குழு உறுப்பினர்கள்:- பொறிஞர் ஐ.பிரபு, பொறிஞர் எஸ்.எஸ்.முத்துகிருஷ்ணன் மற்றும் பொறிஞர் சி.நடராஜன்** ஆகியோர்களுக்கு கிளை சங்கம் சார்பாகப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

**இக்கிளை சங்க கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்ட கிளை சங்க நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

| தலைவர் | செயலாளர் | செயற்குழுஉறுப்பினர்கள் |
|---|---|---|
| **பொறிஞர் ஜெ.கண்ணன்,**<br>கோட்டப் பொறியாளர்,<br>கட்டுமானம் (ம) பராமரிப்பு,<br>திருச்சிராப்பள்ளி. | **பொறிஞர் ஜி.நல்லதம்பி,**<br>உதவிக் கோட்டப்பொறியாளர்,<br>கட்டுமானம் (ம) பராமரிப்பு,<br>துறையூர். | **பொறிஞர் தோ.சமயசக்தி,**<br>உதவிப் பொறியாளர்,<br>கட்டுமானம் (ம) பராமரிப்பு,<br>திருச்சிராப்பள்ளி மேற்கு.<br><br>**பொறிஞர் நெ.திலகவதி,**<br>உதவிப் பொறியாளர்,<br>மண்டல ஆய்வகம்,<br>திருச்சிராப்பள்ளி.<br><br>**பொறிஞர் சி.சௌந்தர்யா,**<br>உதவிப் பொறியாளர்,<br>திட்டங்கள், திருச்சிராப்பள்ளி.<br><br>**பொறிஞர் எஸ்.கார்த்திக்,**<br>உதவிப் பொறியாளர்,<br>பாலங்கள் சிறப்பு ஆய்வு,<br>திருச்சிராப்பள்ளி.<br><br>**பொறிஞர் என்.பரத்குமார்,**<br>உதவிப் பொறியாளர்,<br>நபார்டு (ம) கிராமச் சாலைகள்,<br>மணப்பாறை. |

**தேர்ந்தெடுக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்டகிளை சங்க தலைவர் தலைமையில், மாநில செயலாளர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட பொறியாளர்களின் கருத்திற்கிணங்க கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.**

1. உதவிப் பொறியாளராக 16 ஆண்டுகள் பணியாற்றிக் கொண்டு இருக்கும் 2009ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த அனைத்து உதவிப் பொறியாளார்களுக்கும் உதவிக் கோட்டப் பொறியாளார்களாகப் பதவி உயர்வு விரைந்து பெற்றிடஆவண செய்யுமாறு தலைமைச் சங்கத்திடம் இக்கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

2. ஆறாவது ஊதியக்குழுவில் உள்ளகுறைகளைக் களைந்து மாண்புமிகு நீதியரசர்ஆனந்த் வெங்கடேசன் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் குழு அமைத்து விரைவில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்குமாறு தலைமைச் சங்கத்திடம இக்கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

3. சாலை மற்றும் பாலப்பணிகளில் பாதுகாப்பு குறைபாடுகள் ஏற்படின் அதற்குஒப்பந்ததாரரே முழு பொறுப்பேற்க்க வேண்டும் என்பதை அரசிடம் வலியுறுத்துமாறு தலைமைச் சங்கத்திடம் கிளைச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

4. சங்கமாத இதழை PDFஆக மாற்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள ஆவண செய்யுமாறு தலைமைச் சங்கத்திடம் கிளைச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

5. புதிய உறுப்பினர் சேர்க்கையை இணைய வழி செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவண செய்யுமாறு தலைமைச் சங்கத்திடம் கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

6. காலமுறை ஊதியம் மற்றும் பதவி உயர்வு வழங்க ஆவண செய்யுமாறு தலைமைச் சங்கத்திடம் கிளைச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

7. சங்க இணையதளத்தில் உள்ள பொறியாளர்களின் பட்டியலில் விடுபட்ட புதிய பொறியாளர்களின் பெயர்களை சேர்க்க ஆவண செய்யுமாறு தலைமைச் சங்கத்திடம் கிளைச்சங்கம் கேட்டுக் கொள்கிறது.

8. முதுநிலைபட்டப் படிப்பு ஊதிய உயர்வு 10.03.2020க்கு முன்னர் முதுநிலைபட்டப் படிப்பு முடித்தவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க ஆவண செய்யுமாறு தலைமைச் சங்கத்திடம் கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

9. உதவிக் கோட்டப் பொறியாளர் அனைவருக்கும் ஈப்பு வாகனம் வழங்கிட ஆவண செய்யுமாறு தலைமைச் சங்கத்திடம் கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

10. கட்டுமானம் மற்றும் பராமரிப்பிலுள்ள உதவிப் பொறியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட பயணப்படியைமாற்றி பயணதூரத்திற்கேற்ப பயணப்படி வழங்க ஆவண செய்யுமாறு தலைமைச் சங்கத்திடம் கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

11. பொதுப்பணித்துறையில் உள்ளதுபோல் கை இரசீது ஒப்புதல் வழங்கும் மதிப்பை உதவிக் கோட்டப் பொறியாளர்களுக்கு 1000 ரூபாயிலிருந்து 5000 ரூபாயாகவும், உதவிப் பொறியாளார்களுக்கு 500 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்த்திட ஆவண செய்யுமாறு தலைமைச் சங்கத்திடம் கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

12. ஒவ்வொரு வட்டத்திலும் சங்கக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள தலைமைச் சங்கத்திடம் கிளைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**(ஜெ.கண்ணன்)**
தலைவர்

**(ஜி.நல்லதம்பி)**
செயலாளர்



# பொதுத்துறை நிறுவனங்கள்

## (Public Sector Enterprises)

**பொறிஞர் பாபு சந்திரசேகர், பி.இ., எப்.ஐ.இ.,**
சிறப்புத் தலைமைப் பொறியாளர் (ஓய்வு),
மாம்பழப்பட்டு, விழுப்புரம் வட்டம்

நாடு விடுதலை அடைவதற்கு முன் இரயில், தபால், தந்தி, ராணுவக் கருவிகள் உற்பத்தி மற்றும் சில நிறுவனங்கள் மட்டுமே பொதுத்துறை நிறுவனங்களாக இருந்தன.

**நவீன இந்தியாவின் சிற்பி ஜவஹர்லால் நேரு (1947-1964)**

"நாம் கடின உழைப்பைத் தொடங்குவோம். ஆனால், நாம் உற்பத்தி செய்வது தனிநபர்களின் பைகளை நிரப்புவதற்காக அல்ல; இந்த நாட்டுக்காக, சாதாரண மனிதனின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக. இதைச் செய்தால், இந்தியா வேகமாக முன்னேறுவதை நம்மால் காண முடியும்; நம்மை எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். இந்தியாவை மறுநிர்மாணம் செய்வது என்பது எளிதான காரியமல்ல. நாம் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கிறோம் நம் நாட்டில் வளங்கள் குறைவின்றி இருக்கின்றன. திறம் படைத்த, அறிவார்ந்த, கடின உழைப்பைச் செய்யும் மனிதர்கள் இருக்கின்றனர். இந்த வளங்களையும், மனித ஆற்றலையும் நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்" என்று நவீன இந்தியாவின் சிற்பி, முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்ததும் கூறினார்.

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசுத்துறை (Public Sector) நேருவால் முக்கியமானத் தூணாக உருவாக்கப்பட்டது. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக இருந்த நேரு, "கலப்பு பொருளாதாரம்" (Mixed Economy) என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தினார். அவர் திட்டக்குழுவை (Planning Commission) நிறுவி, ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் கனரகத் தொழில்கள் மற்றும் அடிக்கட்டு அமைப்புகளை உருவாக்கினார்.

பொதுத்துறை நிறுவனங்கள் (PSUs - Public Sector Undertakings) நாட்டின் தொழிற்மயமாக்கலுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கிய அடிப்படையாக அமைந்தன. சுதந்திரம் அடைந்தபோது, இந்தியாவின் தொழில் அடிப்படை மிகவும் பலவீனமாக இருந்தது. பொதுத்துறை மூலம் கனரகத் தொழில்கள், உள்கட்டமைப்பு, வங்கி மற்றும் ஆற்றல் துறைகளை வளர்க்கும் நோக்கில், திட்டமிடப்பட்ட பொருளாதாரம் (Five-Year Plans) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் 1951-ல் இருந்த 5 பொதுத்துறை நிறுவனங்கள் மார்ச் 2021 வரை 177 என எண்ணிக்கையில் உயர்ந்தன.

பல்வேறு பிரதமர்கள் இதன் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றினர் சிலர் விரிவாக்கம் செய்தனர் சிலர் தேசியமயமாக்கல் (nationalization) செய்தனர் பின்னர் சிலர் தனியார்மயமாக்கல் (privatization) தொடங்கினர்.

பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கிட முக்கியப் பிரதமர்களின் பங்களிப்புகளை வரலாற்று வரிசையில் கீழே பார்க்கலாம்.

**பொதுத்துறைகள் உருவாக்கப்பட்ட ஒப்பீட்டு அட்டவணை**

(இந்த அட்டவணை, பல்வேறு பிரதமர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது)

| பிரதமர் | காலம் | உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் | முக்கிய நடவடிக்கை |
|---|---|---|---|
| ஜவஹர்லால் நேரு | 1947-1964 | 33 | பொதுத்துறை அடித்தளம், IPR 1956, கனரகத் தொழில்கள் (Bhilai, Rourkela, Durgapur Steel Plants) CMD மாடல் தொடக்கம் |
| இந்திரா காந்தி | 1966-1984 | 66 | வங்கி தேசியமயமாக்கல் |
| ராஜிவ் காந்தி | 1984-1989 | 16 | தொழில்நுட்ப ஊக்கம் |
| பி.வி. நரசிம்ம ராவ் | 1991-1996 | 11 | தனியார்மயமாக்கல் தொடக்கம் |
| அதல் பிஹாரி வாஜ்பேய் | 1998-2004 | 17 | Navratna அந்தஸ்து |
| மன்மோகன் சிங் | 2004-2014 | 23 | சமூக நலத் திட்டங்கள் |
| நரேந்திர மோடி | 2014-2025 | 0 | 23 பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயமாக்கல் |

**இந்திய பொதுத்துறை நிறுவனங்களின் தற்போதைய நிலை**

இந்தியாவின் பொதுத்துறை நிறுவனங்கள் (Public Sector Undertakings), ஒன்றிய அரசின் கீழ் செயல்படும் மையத்துவ பொதுத்துறை நிறுவனங்கள் (Central Public Sector Enterprises - CPSEs) என்றும் அழைக்கப்படுகின்றன. இவை அரசின் 51% அல்லது அதற்கு மேல் பங்கு வைத்திருக்கும் நிறுவனங்கள். 2025ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியாவில் 389 CPSE உள்ளன. இவை ஆற்றல், பெட்ரோலியம், வங்கி, போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற உத்தியோகபூர்வத் துறைகளில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த நிறுவனங்கள் இந்திய பொருளாதாரத்தில் 6% வேலைவாய்ப்புகளை (சுமார் 39 மில்லியன் பேர்) வழங்குகின்றன.

**வகைப்பாடு**

PSUs-கள் அவற்றின் செயல்திறன், வருவாய், லாபம் அடிப்படையில் மஹாரத்னா, நவரத்னா, மினிரத்னா என்று வகைப்படுத்தப்படுகின்றன. இவை Department of Public Enterprises (DPE) ஆல் மேற்பார்வையிடப்படுகின்றன.

| வகை | எண்ணிக்கை (2025) | தகுதி அளவுகோல் (கடைசி 3 ஆண்டுகளுக்குச் சராசரி) | உதாரணங்கள் |
|---|---|---|---|
| மஹாரத்னா | 13 | விற்பனை: ரூ.25,000 கோடி+<br>லாபம்: ரூ.5,000 கோடி | **Bharat Heavy Electricals Ltd (BHEL), Bharat Petroleum Corporation Ltd (BPCL), Indian Oil Corporation Ltd (IOCL), Oil and Natural Gas Corporation (ONGC), NTPC Ltd, Power Grid Corporation of India Ltd** |
| நவரத்னா | 25 | விற்பனை: ரூ.5,000 கோடி+<br>லாபம்: ரூ.500 கோடி<br>(குறைந்தது ஒரு ஆண்டில்) | **Hindustan Aeronautics Ltd (HAL), Bharat Electronics Ltd (BEL), GAIL (India) Ltd, Shipping Corporation of India** |
| மினிரத்னா-I | 60 | லாபம்: ரூ.30 கோடி<br>(கடைசி 3 ஆண்டுகளில்) | **Airports Authority of India, Bharat Coking Coal Ltd** |
| மினிரத்னா-II | 70 | வருவாய்: ரூ.250 கோடி<br>(கடைசி 3 ஆண்டுகளில்) | **Brahmaputra Valley Fertilizer Corporation Ltd** |

**அரசுத்துறையின் மொத்த பங்களிப்பு**

1. தொழில் மற்றும் அடித்தட்டு வளர்ச்சிக்கான அடித்தளம் அமைத்தது
2. வேலைவாய்ப்பு மற்றும் பகுதி சமநிலை வளர்ச்சி ஏற்படுத்தியது
3. வங்கி, காப்பீடு, மின்சாரம், போக்குவரத்து போன்ற துறைகளில் மக்கள் நலன் மேம்பட்டது
4. பொருளாதார சுயநிறைவு மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு வலு தந்தது.

1947ஆம் ஆண்டு முதல் 1965ஆம் ஆண்டு வரையிலான ஒட்டுமொத்த பட்ஜெட் தொகை ரூ.12,150 கோடி ஆகும். ஆனால், 2022-2023ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் தொகை ரூ.39,44,909 கோடி ஆகும். இதை ஒப்பிடும்போது, மிகக் குறைவான பட்ஜெட் தொகையை வைத்துகொண்டு நேருவின் அரசாங்கம், 17 ஆண்டுகள் ஆட்சியில் செய்திருக்கும் வளர்ச்சிப் பணிகள் மிகவும் பிரம்மாண்டமானவை.

அரசுத்துறை இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்துள்ளது. இன்று, அரசுத்துறை சமூக நலன், தொழில் முன்னேற்றம், சுயநிறைவு ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இந்தியாவின் முன்னேற்றப் பயணத்தில் முக்கியத் தூணாக தொடர்கிறது.

### தமிழ்நாட்டில் உள்ள சில பொதுத்துறை நிறுவனங்கள்

| வ.எண் | துறை | இடம் |
|---|---|---|
| 1 | மின் உற்பத்தி உபகரணங்கள் (BHEL) | திருச்சி, ராணிப்பேட்டை |
| 2 | நிலக்கரி, மின்சாரம் | நெய்வேலி, கல்பாக்கம், கூடங்குளம் |
| 3 | பெட்ரோலியம் | சென்னை, மதுரை |
| 4 | எஃகு உற்பத்தி | சேலம் |
| 5 | விமான நிலைய மேலாண்மை | சென்னை மற்றும் பிற இடங்கள் |
| 6 | எண்ணெய் மற்றும் வாயு | கரைக்கால், நாகப்பட்டினம் |
| 7 | இராணுவ உபகரணங்கள் தொழிற்சாலை | துவாக்குடி, ஆவடி |
| 8 | இரயில் பெட்டி தொழிற்சாலை | பெரம்பூர் |
| 9 | இந்துஸ்தான் போட்டோ பிலிம் | ஊட்டி |
| 10 | உரத் தொழிற்சாலை | மணலி |

**நிதி செயல்திறன் (2024-25 நிதியாண்டு)**

2025-ல் PSUs-களின் செயல்திறன் பொதுவாக வலுவானது. கோவிட் காலத்திற்குப் பின் (2020-2025) லாபத்தின் சராசரி ஆண்டு வளர்ச்சி (PAT CAGR) 36% ஆக உள்ளது, தனியார் நிறுவனங்களை விட அதிகம்.


- மொத்த லாபம்: CPSEகளின் நிகர லாபம் நிதியாண்டு 2021-2022ல் ரூ.2.64 லட்சம் கோடியாக இருந்தது (39.85% வளர்ச்சி). 2025-ல் இது மேலும் உயர்ந்துள்ளது
- உச்ச லாப நிறுவனங்கள்: ONGC, IOCL, Power Grid (2021-22 தரவு; 2025-ல் தொடர்ந்து முன்னிலை)
- ஆண்டு மதிப்பு: BSE PSU இன்டெக்ஸ்-ல் உள்ள நல்ல PSUs-களின் மொத்த மார்க்கெட் கேப் ரூ.19.45 லட்சம் கோடி
- இழப்பு நிறுவனங்கள்: BSNL Air India (இப்போது தனியார்மயமாக்கப்பட்டது), MTNL போன்றவை இன்னும் சவால்களை எதிர்கொள்கின்றன. நிதியாண்டு 2019-2020ல் 70% இழப்பு CPSEகளில் 10 நிறுவனங்கள் 94% இழப்பை ஏற்படுத்தின.

அரசின் PSUs-க்கான பங்கு முதலீடு, நிதியாண்டு 2024-25-ல் ரூ.14,995 கோடி அதிகரித்துள்ளது, ஆனால் கடன்கள் ரூ.14,994 கோடி குறைந்துள்ளன (CAG ரிப்போர்ட்).

**தற்போதைய இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் நிலை**

| | |
|---|---|
| மொத்த எண்ணிக்கை (ஒன்றிய அரசு நிறுவனங்கள், மாநில அரசு + ஒன்றிய அரசு கூட்டமைப்பு நிறுவனங்கள்) | 250 |
| இலாபம் (2023-24) | ரூ.3.10 லட்சம் கோடி |
| சந்தை மதிப்பு | ரூ.45.00 லட்சம் கோடி |
| முக்கிய பொதுத்துறை நிறுவனங்கள் | ONGC, IOC, NTPC, SAIL, Coal India, BPCL, Power Grid |
| 2025-26 நிதி ஒதுக்கீடு | ரூ.50000 ஆயிரம் கோடி (Disinvestment - முதலீட்டிலிருந்து அரசு வெளியேறுதல்) |

# இரங்கல்!



நமது சங்கத்தின் முன்னாள் செயற்குழு உறுப்பினர் பொறிஞர் ச.ராம்பிரபு, (உதவிக் கோட்டப் பொறியாளர், தரக்கட்டுப்பாடு, புதுக்கோட்டை) அவர்களின் தந்தை அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் நிருவாகி **திரு.பி.சக்திவேல்,** ஆட்சி அலுவலர் (பணி நிறைவு), அவர்கள் 25.09.2025 அன்று தஞ்சாவூரில் இயற்கை எய்தினார் என்று அறிவிக்கப் பெரிதும் வருந்துகிறோம். அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைச் சங்கம் தெரிவித்துக் கொள்கிறது

பொறிஞர் கே.லோகநாதன், கோட்டப் பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், தருமபுரி அவர்களின் சகோதரர் **திரு.க.முருகன்** அவர்கள் 25.10.2025 அன்று சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரத்தில் இயற்கை எய்தினார் என்று அறிவிக்கப் பெரிதும் வருந்துகிறோம். அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைச் சங்கம் தெரிவித்துக் கொள்கிறது



**பொறிஞர் பி. செந்தில்குமரன்,** உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கொடைக்கானல் அவர்கள் 13.11.2025 அன்று திண்டுக்கலில் இயற்கை எய்தினார் என்று அறிவிக்கப் பெரிதும் வருந்துகிறோம். அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைச் சங்கம் தெரிவித்துக் கொள்கிறது.



# FIBRE REINFORCED POLYMER (FRP) REIN FORCEMENT-AN OVERVIEW

**By. Dr.C.Balaji Venkateswaran, ME., Ph.D.,**
**Assistant Divisional Engineer,**
**CKICP, Thiruvarur**

## Introduction:

Fibre reinforced polymer reinforcement (FRP) bars are factory made polymer based composite product without the use of steel or other alloys. Concrete is well known for its resiliency and compressive strength and is the second most used material globally. Concrete has been a vital component in the development of civilization, serving as a key material for a wide variety of construction, including buildings, bridges, and many other types of engineered and non engineered applications. As such there is a continuous need to enhance the service life of concrete structures and make them more durable, sustainable and resilient to support society needs. Furthermore, there is also a need to make the concrete green and sustainable and the FRP bars offers a solution to the environment issues associated with the production of steel.

## Composition of Fibre Rein forced Polymer Reinforcement (FRP):

Fibre reinforced polymer are made from filaments or fibresheld in a polymeric resin matrix binder. The fibres are of various types such as Glass(GFRP), Basalt (BFRP) or Carbon (CFRP), Aramid (AFRP).

FRP composites are thus made from fibres, resins, interface, fillers and additives. Fibres of high deformation modulus contribute to the mechanical strength of FRP, whereas resins help with transferring or distributing stress from one fibre to another, to protect the fibre against the environmental and mechanical damages. Resin are polymers having thermo plastic or thermo setting properties based on the thermal process of resins that bonds the fibres. Different types of resins are Polyesters, Epoxy resins Vinyl – ester etc.

Interface between the fibre and the matrix is known to significantly affect the performance of FRP. Fillers help to reduce the shrinkage of FRP and its cost. Additives assist in improving mechanical and physical properties as well as the workability of composites. A Surface treatment is typically provided on FRP that facilitates a bond between the reinforcement and the concrete.

## Properties of FRP:

Main physical properties of fibres of FRP like steel are Density, Tensile strength, Deformation modulus(or) Modulus of elasticity, Elongation, Coefficient of thermal expansionand the Poisson ratio.

The Tensile strength of FRP range from 4800 MPa to 2500 MPa ( Maximum of 700 MPa for the reinforcing steel). Density are of 1440 kg/cum to 2500 kg/cum (Density of steel is 7850 kg/cum). Modulus of Elasticity of FRP range from 70 – 800 GPa (Deformation modulus of steel is 200GPa). Elongation % range from 0.5 to 4 % whereas elongation percentage of steel is 10 to 20% and Poisson ratio from 0.20 to 0.35 where as for steel the values is 0.30.

The carbon based CFRP and the Glass based GFRP are having better mechanical properties than the other types.

Key issues in the use of FRP as reinforcement is the bond between the reinforcement and the concrete and the slippage of reinforcement form concrete. This shall be addressed by the use of deformed or sand coated technology on FRP using Pultrusion techniques.

Following figure shows the FRP bars and their structure.

Key issues in the use of FRP as reinforcement is the bond between the reinforcement and the concrete and the slippage of reinforcement form concrete. This shall be addressed by the use of deformed or sand coated technology on FRP using Pultrusion techniques.

Following figure shows the FRP bars and their structure.

**Properties of FRP:**

Main physical properties of fibres of FRP like steel are Density, Tensile strength, Deformation modulus(or) Modulus of elasticity, Elongation, Coefficient of thermal expansion and the Poisson ratio.

The Tensile strength of FRP range from 4800 MPa to 2500 MPa ( Maximum of 700 MPa for the reinforcing steel). Density are of 1440 kg/cum to 2500 kg/cum (Density of steel is 7850 kg/cum). Modulus of Elasticity of FRP range from 70 – 800 GPa (Deformation modulus of steel is 200GPa). Elongation % range from 0.5 to 4 % whereas elongation percentage of steel is 10 to 20% and Poisson ratio from 0.20 to 0.35 where as for steel the values is 0.30.

The carbon based CFRP and the Glass based GFRP are having better mechanical properties than the other types.

Key issues in the use of FRP as reinforcement is the bond between the reinforcement and the concrete and the slippage of reinforcement form concrete. This shall be addressed by the use of deformed or sand coated technology on FRP using Pultrusion techniques.

Following figure shows the FRP bars and their structure.





**Fig 1. FRP Bars and their structure[2]**

**Major advantages of FRP:**

1. They are having very high tensile strength and offers higher durability.
2. FRP can be used for both internal and external reinforcement and they can be advantageously used for strengthening the existing structures, seismic retrofitting, repairing damaged concrete and they can be used in the form of rods (rebar), sheets or as fabrics depending on the application.
3. They can be used in harsh environments requiring high strength and durability as they are corrosion resistant.
4. Due to their low unit weight, they can be advantageously used in certain applications such as retrofitting the existing structures where weight limitations are a concern.
5. High tensile strength results in light weight smaller RCC sections when compared to steel.
6. Their production is not energy intensive whereas the production of steel is a highly energy intensive process. Thus, FRP contributes to less carbon foot print and is environment friendly.

**Disadvantages of FRP:**

1. Since it is a composite material the properties such as modulus of elasticity and strain is not uniform and is influenced by all the constituent materials.
2. Fire resistance is very low.
3. Most of the FRP materials lack sufficient ductility and typically exhibit a linear stress strain behaviour up to rupture without any yielding.
4. Poor Shear strength.
5. Inability to bend to desired shape at the site.
6. Low Modulus of elasticity( E) in the case of AFRP and BFRP.
7. Higher cost of production when compared to Steel.

Following figure shows the type of FRP bars and their properties.





**Fig2. Properties of FRP Bars and steelbars[2]**

Standardson FRP:

ASTM D7957 and ACI 440 standards have recommended guidelines for the use of FRP as reinforcement material. But ASCE (ASCE /SEI 41) have recommended the FRP as rehabilitation materials for strengthening and retrofitting applications. BIS IS 18256/18255 - 2023 specifies the use of GFRP bars for concrete reinforcement. IRC 137 -2022 recommends the use of GFRP bars in Highways structures. Euro code 2(EN 1992-1-1) provides guidelines for the design of concrete structures including those reinforced with FRP.

IRC 37 2022 – Guidelines on the use of Fibre Reinforced Polymer bars in Road projects (Part 1 GFRP bars) The IRC code specifies design criteria,QA/QC, Construction practice and Quality control ,R&D needs etc.,. The code also specifies the permitted structural & Non structural components that can use FRP bars in their construction such as Approach slabs,Bridge decks and its overlays ,concrete roads, retaining walls,Noise barriers,Box culverts etc.,

Conclusion: Research to test the use and performance of FRP bars, for various applications, may be carried out to for pavement and bridge structures in such way that guidelines could be formulated for their wide use.

Reference:

1. A reviewon embedded fibre –Reinforced polymer reinforcement in structural concrete in Europe, Sara Reichenbachetal., Construction and Building Materials, Vol 307, 8 Nov 2021.
2. FRP reinforcement for concrete structures: state of the art review of application and design by Eugenijus Gudonis et al., Engineering and Structures Technologies, December 2013.
3. Fiber–reinforced Polymer( FRP) inconcrete: A comprehensive survey, Nima khodadadi et. al., Vol 432,8 June 2024.
4. Fiber Reinforced Polymer Reinforcing, Florida Department of Transportation (FDOT), USA, 2022
5. Fibre Reinforced Plastics (PRP) reinforcement, The Concrete Society, UK



### ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் குழு அமைத்து

# 6வது ஊதியக்குழு குறைகளை களைய வேண்டும்

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்தின் மாநில செயற்குழுவில் தீர்மானம்

திருச்சி, அக்.6—

தமிழ்நாடு ஓய்வுபெற்ற நீதிபதி சத்திய நாராயணன் தலைமையில்குழு அமைத்து விரைவில் 6வது ஊதியக்குழு குறைகளை களைய வேண்டும்'' என்று தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை பொறியாளர்கள்சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் திருச்சியில் நடந்தது. சங்க மாநிலத் தலைவர் ராமநாதன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் வீரமணி, பொருளாளர் தியாகராஜா, துணைத் தலைவர்கள் பாண்டியன், கிருஷ்ணன், செயலாளர்கள் விஜ யராகவன், ஜோதி பாசு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், பொதுச்செயலாளர் வீரமணி பேசுகையில், ''நெடுஞ்சாலைத்துறை உதவிப்பொறியாளர்கள் முன்பு, டிஎன்பிஎஸ்சி மூலம் எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வு மூலமாக நியமிக்கப்பட்டனர். ஊதியம் குறைப்பால், அலுவலக பணியாளர்களை தேர்வு செய்வது போன்று நேர்முகத் தேர்வு இல்லாமல் எழுத்துத் தேர்வு மூலம் மட்டும் நியமிக்கப்படுவதால், தரமான பொறியாளர்களை உருவாக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

6வது ஊதியக்குழுவின் போது, முதல்வராக இருந்த கருணாநிதி, பொறியாளர்களின் பணித்திறனை ஊக்குவிக்கும் வகையில் ராஜீவ்ரஞ்சன் தலைமையில் ஒரு நபர் குழு அமைத்து ஊதியத்தை உயர்த்தி வழங்கினார். தற்போதும், மாநிலத்திட்டத்தின் உட்கட்டமைப்புகளான மாநில அரசின் பராமரிப்பில் உள்ள67ஆயிரத்து216கிலோ மீட்டர் சாலை, தேசிய நெடுஞ்சாலையில் ஆயிரத்து 677 கிலோ மீட்டர், பாலங்கள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்த பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். எனவே, பொறியாளர்களுக்கு டாக்டர்கள், அரசு வக்கீல்கள், கால்நடை டாக்டர்களுக்கு இணையானஊதியம்வழங்க வேண்டும். மேலும், கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் ஓய்வுபெற்ற நீதிபதி சத்திய நாராயணன் தலைமையில் குழு அமைத்து விரைவில் 6வது ஊதியக்குழு குறைகளை களைய வேண்டும்'', என்றார்.

கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறையில் தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் கோட்டப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க முதல்வர் மற்றும் அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பது, 2025–26ம் ஆண்டுக்கான காலிப்பணியிடங்களை கணக்கிட்டு உதவிப் பொறியாளர்களிலிருந்து உதவிக் கோட்டப் பொறியாளர்களாகப் பதவி உயர்வு விரைவில் வழங்க வேண்டும், உதவிப் பொறியாளர்கள் பலர் 16 ஆண்டுகளாக பணியாற்ற சில மாதங்களில் ஓய்வு பெற உள்ளதால், இப்பதவி உயர்வை விரைவில் வழங்க வேண்டும், 2016ம் ஆண்டுக் குப்பின் பணியில் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட நெடுஞ்சாலைத்துறை உதவிப் பொறியாளர்கள், அதற்கு முன்பு சேர்ந்த உதவிப்பொறியாளர்களை விட ரூ.20 ஆயிரம் ஊதியம் குறைவாகப் பெற்று வருவதால், 6வது ஊதியக்குழுவின் குறைகளை களைய தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாலை முரசு 6.10.2025

# அரசு டாக்டர்களுக்கு இணையான சம்பளம் : நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் கோரிக்கை

திருச்சி, அக். 6–

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்க மாநில செயற்குழு கூட்டம் திருச்சியில் நேற்று நடந்தது.

மாநில தலைவர் ராமநாதன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் வீரமணி, பொருளாளர் தியாகராஜா, துணைத் தலைவர்கள் பாண்டியன், கிருஷ்ணன், செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், பொதுச்செயலாளர் வீரமணி பேசுகையில், "துறை உதவிப்பொறியாளர் முன்பு, டிஎன்பிஎஸ்சி தேர்வு மூலம் நியமிக்கப்பட்டனர். ஊதியக் குறைப்பால், அலுவலக பணியாளர் போன்று நேர்முகத் தேர்வு இன்றி எழுத்துத்தேர்வு மூலம் மட்டும் நியமிப்பதால், தரமான பொறியாளர்கள் இல்லாத சூழ்நிலை உள்ளது. 6வது ஊதியக்குழுவின் போது, முதல்வர் கருணாநிதி, பொறியாளர் பணித்திறன் ஊக்குவிக்க ராஜீவ்ரஞ்சன் குழு அமைத்து ஊதியம் உயர்த்தினார். தற்போதும், மாநில அரசின் பராமரிப்பில் உள்ள 67 ஆயிரத்து 216 கிமீ சாலை, தேசிய நெடுஞ்சாலையில் ஆயிரத்து 677 கிமீ, பாலங்கள் போன்ற அடிப்படை வசதி ஏற்படுத்த பொறியாளர்கள் பணி புரிகின்றனர்.

எனவே, பொறியாளர்களுக்கு டாக்டர், அரசு வக்கீல், கால்நடை டாக்டருக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும். மேலும், கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் ஓய்வு நீதிபதி சத்திய நாராயணன் தலைமையில் குழு அமைத்து ஊதியக் குறையை களைய வேண்டும்", என்றார்.

கூட்டத்தில், தலைமை பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர், கோட்ட பொறியாளருக்கு பதவி உயர்வு வழங்கிய முதல்வர், அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பது, நடப்பாண்டு காலிப்பணியிடம் கணக்கிட்டு உதவி பொறியாளரிலிருந்து உதவி கோட்டப் பொறியாளர் பதவி உயர்வு விரைவில் வழங்கவும், உதவி பொறியாளர் பலர் 16 ஆண்டு பணியாற்றி ஓய்வு பெற உள்ளதால், பதவி உயர்வை விரைவில் வழங்கவும், 2016க்குப்பின் பணியில் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட உதவி பொறியாளர், அதற்கு முன் சேர்ந்தவர்களை விட ரூ.20 ஆயிரம் ஊதியம் குறைவாக பெறுவதால், ஊதியக்குழு குறை களைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினமலர் 6.10.2025

# காலி பணியிடங்களை கணக்கிட்டு பதவி உயர்வு வழங்க வேண்டும்

## நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் கோரிக்கை

திருச்சி, அக்.6-

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் நேற்று திருச்சியில் மாநில தலைவர் ராமநாதன் தலைமையில் நடைபெற்றது. 2025-26-ம் ஆண்டுக்கான காலி பணியிடங்களை கணக்கிட்டு உதவி பொறியாளர்களில் இருந்து உதவி கோட்ட பொறியாளர்களாக பதவி உயர்வை விரைவில் வழங்கிட வேண்டும். 2016-ம் ஆண்டுக்கு பிறகு பணியில் சேர்ந்த சுமார் 500-க்கும் மேற்பட்ட நெடுஞ்சாலைத்துறையின் உதவி பொறியாளர்கள் அதற்கு முன்பு சேர்ந்த உதவி பொறியாளர்களை விட ரூ.20 ஆயிரம் ஊதியம் குறைவாக பெற்று வருகிறார்கள். எனவே தமிழக அரசு 6-வது ஊதிய குழுவின் குறைகளை களைந்திட வலியுறுத்துவது, நெடுஞ்சாலை துறையில் தலைமை பொறியாளர்கள் கண்காணிப்பு பொறியாளர்கள், கோட்ட பொறியாளர்கள் ஊதிய உயர்வு வழங்கியதற்காக தமிழக முதல்-அமைச்சர், நெடுஞ்சாலை துறை அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் சங்க பொதுச்செயலாளர் வீரமணி, பொருளாளர் தியாகராஜா உள்பட மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி 6.10.2025

# 6வது ஊதிய குழு குறைகளை களைய வேண்டும்

## தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வலியுறுத்தல்

திருச்சி, அக்.6: தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்க மாநில செயற்குழு கூட்டத்தில் 6வது ஊதிய குழுவில் உள்ள குறைகளை களையவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்க மாநில செயற்குழு கூட்டம் திருச்சியில் நேற்று நடைபெற்றது. சங்கத்தின் மாநில தலைவர் ராமநாதன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் வீரமணி, பொருளாளர் தியாகராஜா, துணை தலைவர்கள் பாண்டியன், கிருஷ்ணன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், நெடுஞ்சாலைத்துறை தலைமைப்பொறியளார்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள் பதவி உயர்வு வழங்கிய தமிழ்நாடு முதல்வருக்கும், பொதுபணிகள், நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலுவுக்கு நன்றி, 2025-26 காலிப்பணியிடங்களை கணக்கிட்டு உதவிப்பொறியாளர்களுக்கு உதவிக் கோட்ட பொறியாளர்களாக பதவி உயர்வு விரைவில் வழங்க வேண்டும், 2016ம் ஆண்டுக்கு பிறகு பணியில் சேர்ந்த 500ம் மேற்பட்ட நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர்கள், அதற்கு முன் சேர்ந்த உதவிபொறியாளர்களை விட ரூ. 20 ஆயிரம் ஊதியம் குறைவாக பெறுகின்றனர். தமிழக அரசு 6வது ஊதியக்குழுவின் குறைகளை களைந்திட வலியுறுத்த இந்த கூட்டம் வேண்டுகிறது, தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணயம் சார்பில் முன் உதவி பொறியாளர்கள் எழுத்து மற்றும் நேர்முக தேர்வு வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தற்போது ஊதிய குறைப்பின் காரணமாக அலுவலக பணியார்களைபோல் நேர்முக தேர்வின்றி எழுத்து தேர்வு மட்டும் வைத்து ஆட்சேர்ப்பதால் தரமான பொறியாளர்கள கிடைப்பது இல்லை.

எனவே இதை களைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், 6வது ஊதிய குழுவில் கலைஞர் கருணாநிதி ஓமாந்துரார் கட்டிடம் கட்டப்படும்போது ராஜீவ் ரஞ்சன் தலைமையில் தனிநபர் குழு அமைத்து சிறந்த பொறியாளர்களுக்கு ஊதியம் உயர்த்தி வழக்கி ஊக்குவிக்கப்பட்டது.

அதேபோல் மாநிலத்தின் கட்டமைப்பு வளர்ச்சியில் முக்கி பங்காற்றும் பொறியாளர்களுக்கு மருத்துவர்கள், வக்கீல்களுக்கு இணையான ஊதியம் வழங்க ஓய்வுபெற்ற நீதிபதி சத்ய நாராயணன் தலைமையில் குழு அமைத்து 6வது ஊதிய குழுவில் உள்ள குறைகளை களைந்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தினகரன் 6.10.2025

# நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்கள் சங்க கலந்தாய்வுக் கூட்டம்

தருமபுரி

தருமபுரி மாவட்டத்தில் பணிபுரியும் நெடுஞ்சாலைத் துறை உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவி கோட்ட பொறி யாளர்கள் சங்க கலந்தாய்வு கூட்டம் தருமபுரியில் நடந்தது. கூட்டத்திற்கு ஜெய்சங்கர் தலைமை வகித்தார். பொறி யாளர் நரசிம்மன் சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தின் போது, சங்கத் தின் புதிய மாவட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் பி.நாகராஜி தலைவராகவும், உதவி கோட்ட பொறியாளர் அரூர் ஜெய்சங்கர் செயலாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாக கோவிந்தசாமி, ரஞ்சித் மற்றும் மன்னர்மன்னன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

15 வருடங்களுக்கு மேலாக உதவி பொறியாளர்களாக பணிபுரிந்து வரும் பொறி யாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும், என வலியுறுத்தப்பட்டது. தீபாவளியின்போது சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் பட்டாசு கள் வெடிப்பதை குறைத்துக் கொண்டு, புத்தகங்களை பரிசாக கொடுப்போம் என்ற வகையில் நெடுஞ் சாலைத்துறை அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.30 ஆயிரம் மதிப்பிலான புத்த கங்களை பரிசாக கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்து தமிழ் 14.10.2025

## மாநில நெடுஞ்சாலைத் துறை

# உதவி பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க கோரிக்கை

**திருச்சி**

தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை பொறியாளர் சங்க மாநில செயற்குழுக் கூட்டம் திருச்சியில் நேற்று நடைபெற்றது. மாநிலத் தலைவர் சே.ராமநாதன் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் ப.வீரமணி, பொருளாளர் சொ.தியாகராஜன், துணைத் தலைவர்கள் சோ.பாண்டியன், எ.கிருஷ்ணன், செயலாளர்கள் ஜி.விஜயராகவன், ஜோதிபாசு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில், மாநில நெடுஞ்சாலைத் துறையில் 16 ஆண்டுகளாக பணியாற்றிய 40-க்கும் மேற்பட்ட உதவிப் பொறியாளர்கள் இன்னும் சில மாதங்களில் உதவிப் பொறியாளர்கள் நிலையிலேயே ஓய்வுபெற உள்ளனர். அவர்களுக்கு 2025-26-ம் ஆண்டுக்கான காலிப் பணியிடங்களை கணக்கிட்டு உதவிப் பொறியாளர்களில் இருந்து உதவி கோட்டப் பொறியாளர்களாகப் பதவி உயர்வை விரைவில் வழங்க வேண்டும்.

தமிழக அரசு அமைத்த 6-வது ஊதியக் குழு சீரமைப்பில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக 2016-ம் ஆண்டுக்கு பிறகு பணியில் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட நெடுஞ்சாலைத் துறையின் உதவிப் பொறியாளர்கள் ஊதியத்தில் ரூ.20,000 குறைவாகப் பெற்று வருகின்றனர். எனவே, தமிழக அரசு 6-வது ஊதியக் குழுவின் குறைகளை களைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் உள்ள மேல்முறையீட்டு மனுவை விரைந்து முடித்துவைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்து தமிழ் 06.10.2025

ஆக்கிரமிப்பை அகற்ற வந்த அரசு அதிகாரிகளை கொல்ல முயற்சி

# கணவர், மனைவி, மகன் உள்பட 4 பேருக்கு 7 ஆண்டு சிறை

## தண்டனையை நெல்லை கோர்ட் உறுதி செய்தது

நெல்லை, அக். 23: ஆக்கிரமிப்பை அகற்ற எதிர்ப்பு தெரிவித்து அரசு அதிகாரிகளை காரை ஏற்றிக் கொல்ல முயன்ற வழக்கில், கணவர், மனைவி, மகன் உள்பட 4 பேருக்கு விதிக்கப்பட்ட 7 ஆண்டு சிறைத் தண்டனையை நெல்லை முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் உறுதி செய்தது.

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் அருகே வீயன்னூர் கிராமத்தில் அர்ஜுனன் என்பவர் நெடுஞ்சாலைத்துறைக்குச் சொந்தமான சாலை புறம்போக்கு நிலத்தில் மதில் சுவர் கட்டியிருந்தார். இது வசுமதி என்பவரது வீட்டிற்கு செல்ல இடையூறாக இருந்ததால், அவர் மாவட்ட கலெக்டர் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தார். ஆக்கிரமிப்பை அகற்ற நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து, 2008ம் ஆண்டு பிப்.6ம் தேதி, தக்கலை நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்டப் பொறியாளர் அந்தோணி சேவியர், இளநிலை பொறியாளர் சுந்தரம், போலீஸ் வின்சென்ட் உள்ளிட்ட அதிகாரிகள் ஆக்கிரமிப்பை அகற்றச் சென்றனர். அப்போது அர்ஜுனன் அவரது மனைவி கனீஷ்பாய், அவர்களது மருமகன் ரசல்ராஜ் ஆகியோர் அரசுப் பணியை செய்யவிடாமல் தடுத்து, அதிகாரிகளை அவதூறாக பேசியதாகக் கூறப்படுகிறது. அப்போது, அர்ஜுனனின் மகன் செந்தில்குமார் காரை ஓட்டி வந்து அதிகாரிகள் மீது மோதினார். இதில் பொறியாளர்கள் சுந்தரம், அந்தோணி சேவியர் மற்றும் போலீஸ் வின்சென்ட் ஆகியோர் காயமடைந்தனர்.

இது குறித்து பொறியாளர் சுந்தரம் அளித்த புகாரின் பேரில், திருவட்டார் போலீசார் கொலை முயற்சி, அரசு ஊழியரை பணி செய்ய விடாமல் காயப்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர். வள்ளியூர் சப்.கோர்ட்டில் நடந்த இந்த வழக்கில், 2023ம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் அர்ஜுனன் உள்பட 4 பேருக்கும் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த தண்டனையை ரத்து செய்யக்கோரி அவர்கள் 4 பேரும் நெல்லை முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி செல்வம், 'காயமடைந்த அரசு அதிகாரிகளே சாட்சிகளாக இருந்து நிகழ்வை உறுதி செய்துள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் படித்தவர்களாக இருந்தும், உயர் நீதிமன்ற உத்தரவை மதிக்காமல், அரசு அதிகாரிகளை பணி செய்ய விடாமல் தடுத்து, காரை ஏற்றிக் கொல்ல முயன்ற செயல் கண்டிக்கத்தக்கது' என்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். இதையடுத்து,

அர்ஜுனன், அவரது மனைவி கனீஷ்பாய், அவர்களது மருமகன் ரசல்ராஜ், மகன் செந்தில்குமார் ஆகிய 4 பேரின் மேல்முறையீட்டு மனுவையும் தள்ளுபடி செய்த நீதிபதி, அவர்களுக்கு விதிக்கப்பட்ட 7 ஆண்டு சிறை தண்டனையை உறுதி செய்து உத்தரவிட்டார்.

தினகரன் 23.10.2025



## தருமபுரியில்

# நெடுஞ்சாலைத்துறை சார்பில் கலந்தாய்வு கூட்டம்

தருமபுரி, அக்.14–

தருமபுரி மாவட்டத்தில் பணிபுரியும் நெடுஞ்சாலைத் துறை உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவி கோட்ட பொறியாளர்கள் மாவட்ட நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கும் வகையில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

இதில், 15 வருடங்களுக்கு மேலாக உதவி பொறியாளர்களாக பணிபுரிந்து வரும் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும். நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நபார்டு மற்றும் கிராம சாலைகள், தரக்கட்டுப்பாடு ஆகியவற்றில் பணிபுரியும் உதவி பொறியாளர்கள் உதவி கோட்ட பொறியாளர்கள் மற்றும் கோட்ட பொறியாளர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து கூட்டம் நடத்துவது. கூட்டத்தில் பொறியாளர்களின் ஊதிய முரண்பாடுகளை கலைவது உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேலும், மாவட்ட நிர்வாகிகளாக, நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் நாகராஜி தலைவராகவும், உதவி கோட்ட பொறியாளர் அரூர் ஜெய்சங்கர் செயலாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாக உதவி கோட்ட பொறியாளர் கோவிந்தசாமி, உதவி பொறியாளர்கள் ரஞ்சித் மற்றும் மன்னர் மன்னன் ஆகியோர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். முடிவில் மாவட்ட நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ.30,000 மதிப்பிலான புத்தகங்கள், பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. தீபாவளி அன்று சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் பட்டாசுகள் வெடிப்பதை குறைத்து, புத்தகங்களை பரிசாக கொடுப்போம் என்ற வகையில் முடிவு எடுக்கப்பட்டது.

மாலை மலர் 14.10.2025